பொது நூலகம் யாழ்ப்பாணம்
07 MAY 1999
மாநகராட்சி மன்றம் யாழ்ப்பாணம்

பக்கங்கள் | பத்து

Registered as a News Paper

# உதயன்

விலை ரூபா 6-00

ஈ.சி 14 வள்ளுவர் ஆண்டு2030 சித்திரை 24வெள்ளிக்கிழமை(07-05-1999) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்139

## ரெலோ ஆதரவாளரின் சடலம் வவுனியாவில் மீட்பு

வவுனியா, மே 7

வவுனியா கரப்பன் காட்டுப் பகுதியில் நேற்றுக் காலை வர்த்தகர் ஒருவரின் சடலம் சூட்டுக் காயங்களுடன் பொலீஸாரால் மீட்கப்பட்டது.

தோணிக்கல் பகுதியில் கடை வைத்திருந்த சிவசுப்பிரமணியம் தயானந்தன் (27 வயது) என்பவருடையது என சடலம் அடையாளம் காணப்பட்டது.

(9 ஆம் பக்கம் பார்க்க)

## மாத நடுப்பகுதியில் லங்காமுடித்த 3 தடவை பயணிகள் சேவை நடத்தும்

கொழும்பு, மே 7

காங்கேசன்துறையில் பொருள் இறக்கும் பணியில் ஈடுபட்டுள்ள 'லங்கா முடித்த கப்பல் இம்மாதம் நடுப்பகுதியில் காங்கேசன்துறைக்கும் திருகோணமலைக்கும் இடையில் மூன்று தடவைகள் பயணிகள் சேவையில் ஈடுபடவிருக்கின்றது.

வன்னியில் இருந்து யாழ்ப்பாணம் வருவதற்காக திருகோணமலைக்கு வரும் அகதிகளின் எண்ணிக்கையைப் பொறுத்து இந்தச் சேவை மேலும் அதிகரிக்கப்படலாம் என்று வடமாகாண மீள்குடியமர்வு, புனர்வாழ்வு அதிகாரசபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

காங்கேசன்துறை வந்துள்ள 'லங்கா மூடித்த கப்பலில் அரிசி. சீனி மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் எடுத்து வரப்பட்டுள்ளன.

(இ-3-5)

# புளொட் அலுவலகம் அருகில் நேற்றுக் குண்டு வெடிப்பு

## ரெலிக்கொம் கபின்பெட்டி தகர்ப்பு

மட்டக்களப்பு புறநகர்ப் பிரதேசத்தில் ஸ்ரீலங்கா ரெலிக்கொம் நிறுவன பரிவர்த்தனை 'கபின்' பெட்டி ஒன்று நேற்றுக் காலை 7 மணியளவில் குண்டு வைத்

(9 ஆம் பக்கம் பார்க்க)

## அகில இலங்கை சைவ மாநாடு இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், மே 7

யாழ். சைவபரிபாலன சபை நடத்தும் அகில இலங்கை சைவ மாநாடு இன்று [illegible] வெள்ளிக்கிழமை

[9 ஆம் பக்கம் பார்க்க]

## வவுனியாவில் ஒருவர் பலி

வவுனியா, மே 7

வவுனியா கோயில்குளம் பகுதியில் புளொட் தலைமைக் காரியாலயத்துக்குச் சமீபமாக நேற்றுக் காலை 8-10 மணியளவில் குண்டு ஒன்று வெடித்தது.

இந்தக் குண்டு வெடிப்பில் சிக்கிப் பாடசாலை மாணவன் ஒருவர் உயிரிழந்தார்; புளொட் உறுப்பினர் இருவர் உட்பட அறுவர் காயமடைந்தனர்.

வவுனியா கோயில் குளம் பகுதியில் நேற்றுக் காலை சைக்கிள் ஓட்டப் போட்டி ஒன்று நடைபெற்றுக்கொண்டிருந்தது.

அந்த நேரத்திலேயே புளொட் தலைமையகத்துக்கு முன்பாக குண்டு வெடித்தது.

நேரம் கணித்து வைக்கப்பட்ட குண்டே வெடித்ததாக கூறப்பட்ட போதும், கிளைமோர் குண்டு வெடித்ததாக மற்றொரு தகவல் தெரிவித்தது.

இந்தக் குண்டு வெடிப்பில்

(9 ஆம் பக்கம் பார்க்க)



அப்ப அரசின் சாதனைகளில இதுவும் ஒண்டு போல...!

## இளைஞன காணவில்லை என முறையீடு

யாழ்ப்பாணம், மே 7

பருத்தித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட இளைஞர் ஒருவர் யாழ். பஸ் நிலையத்தில் காணாமல் போய்விட்டார் என்று அவரது தாயாரினால் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பலராமன் பிரதீபன் (வயது 15—வி.எம். வீதி. பருத்தித்துறை) என்ற இந்த இளைஞன் கடந்த 3 ஆம் திகதி

[9 ஆம் பக்கம் பார்க்க]

## அரசின் 4½ வருட ஆட்சியில் 12,500 படையினர் பலி!

### நாடாளுமன்றில் தகவல்

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் கடந்த நாலரை வருட ஆட்சியில் சுமார் 12 ஆயிரத்து 500 படையினரை இராணுவம் இழந்துள்ளது.

இப்படி ஐ. தே. கவின் நாடாளுமன்ற உறுப்பினர் எம். எச். பாருக் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

அவசர காலச் சட்டத்தை நீடிக்கும் பிரேரணை மீதான

[9 ஆம் பக்கம் பார்க்க]

# 3 ஆயிரம் படையினரை வன்னியில் திரட்ட முடிவு

## வவுனியா படைத்தளபதி தெரிவிப்பு

'வன்னியில் 3 ஆயிரம் பேரை இராணுவத்துக்கு திரட்ட நடவடிக்கை எடுக்கப்படுகின்றது' என்று வவுனியா படைத்தள அதிகாரி மேஜர் ஜெயக்கொடி தெரிவித்தார்.

மேஜர் ஜெயக்கொடி வவுனியாவில் நேற்று செய்தியாளர் மாநாடு ஒன்றை நடத்தினார்.

யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வரும் சமாதானத்துக்கான யுத்தத்தில் ஈடுபட 3 ஆயிரம் படையினரை திரட்ட எடுக்கும் நடவடிக்கையில் தமிழ், சிங்கள, முஸ்லிம் இளைஞர்களை இணையுமாறு வன்னிப் படை நடவடிக்கைகளின் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் லயனல் பலகல்ல வேண்டுகோள் விடுத்துள்ளார் என்றும்

(9 ஆம் பக்கம் பார்க்க)

## மொனராகலக் காட்டில் படையினர் தேடுதல்

கொழும்பு, மே 7

மொனராகல கஹம்பான காட்டுப் பகுதியில் பொலீஸார் நேற்று முன்தினம் திடீர் தேடுதல் நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

ஆயுதம் தரித்த விடுதலைப் புலிகள் மேற்படி காட்டுப் பகுதியினுள் ஊடுருவியுள்ளனர் என அப்பிரதேச மக்கள் கொடுத்த தகவலை அடுத்தே இந்தத் தேடுதல் நடத்தப்பட்டது.

எனினும் நேற்றுமுன்தினம் வரை எவரும் அப்பகுதியில் இருந்து பொலீஸாரால் கைது செய்யப்பட வில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

(இ-7)

# ஈழப்பிரகடனம் செய்த பெருமாள் மீது ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை?

## நாடாளுமன்றில் ஐ. தே. கட்சி எம். பி. கேள்வி

கொழும்பு, மே 7

தமிழீழப் பிரகடனம் செய்ததன் மூலம் தேசத்துரோகக் குற்றம் புரிந்த வடக்கு - கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் அ. வரதராஜப் பெருமாள் மீது அரசாங்கம் நடவடிக்கை எடுக்காதது ஏன்?

ஐ. தே. க. நாடாளுமன்ற உறுப்பினர் திலக் கருணரத்தின மேற்கண்டவாறு நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பினார்.

அவசர காலச் சட்டத்தை மேலும் ஒரு மாத காலத்துக்கு நீடிக்கும் பிரேரணை மீது உரையாற்றுகையில் அவர் மேலும் பேசியதாவது:

ஐந்து ரூபா களவு எடுத்தவருக்கு எதிராக தண்டனை வழங்கக் கூடியதான சட்டதிட்டங்கள் இருக்கும் போது

(9 ஆம் பக்கம் பார்க்க)

## தேங்கிக்கிடந்த நூல்கள் நேற்று யாழ். வந்தன

கல்வித் திணைக்களத்திலும் மாகாணக் கல்வி அமைச்சிலும் பல மாதங்களாகத் தேங்கிக்கிடந்த யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கான பாடத் திட்டங்கள், ஆசிரிய கைநூல்கள் செஞ்சிலுவைச் சர்வதேசக்குழுவின் கப்பல் மூலம் நேற்று எடுத்து வரப்பட்டன.

பாடசாலைகளில் உள்ள நூலகங்களுக்கான ஒரு தொகுதி புத்தகங்களும் எடுத்துவரப்பட்டுள்ளன.

யாழ். மாணவர்களுக்குரிய மற்றும் பல கைநூல்களையும் யாழ்ப்பாணம் எடுத்து வர செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு இணங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

இளைய தலைமுறையின் இதயம் தவழும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரவணை பள்ளம்புலம்
வள்ளி தேவசேனா சமேத

## ஸ்ரீ முருகப்பெருமான் திருக்கோயில்
## நவகுண்டபக்ஷ
## புனராவர்த்தன பிரதிஷ்டா
## மகா கும்பாபிஷேகம்

காலம்: இன்று 07-05-1999 வெள்ளிக்கிழமை

நேரம்: காலை 6.29 மணிமுதல் - 8.20 மணிவரை

பிரதிஷ்டா பிரதமகுரு
சிவாச்சார்யமணி
சிவஸ்ரீ நா. யோகீஸ்வரக்குருக்கள்

அடியார்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அறங்காவற்சபை,
பள்ளர்புலம் அருள்மிகு முருகமூர்த்தி கோயில்,
சரவணை.

(65521)

## யாழ்ப்பாணம் வணிகர் கழகம்
## கப்பலுக்கான இட ஒதுக்கீடு

கொழும்பிலிருந்து பொருள்களைக் கொண்டு வருவதற்குக் கப்பலில் இட ஒதுக்கீடு சம்பந்தமான கலந்துரையாடல் 07- 05- 99 வெள்ளிக்கிழமை பி. ப. 3.30 மணிக்கு (புதிய நேரம்) யாழ்ப்பாணம் வணிகர் கழகப் பணிமனையில் நடைபெறும்.

கொழும்பிலிருந்து பொருள்களைக் கப்பலில் கொண்டுவர விரும்பும் யாழ்ப்பாணம் வணிகர் கழக அங்கத்தவர் யாவரும் இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று இக் கலந்துரையாடலில் கலந்துகொள்ளும்படி அன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

தங்களிடம் உள்ள பாதுகாப்பு அமைச்சின் அனுமதிக்கு ஏற்ப கலந்துரையாடலுக்கு வரும்போது, தங்களால் இம் மாதம் கப்பலில் பொருள்கள் கொண்டுவர தேவையான இட ஒதுக்கீடு எவ்வளவு என எமக்கு அறியத்தரும் வண்ணம் அன்புடன் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

யாழ்ப்பாணம் வணிகர் கழகம்.

இல. 27, நவீன சந்தை (மேல்மாடி)
யாழ்ப்பாணம்.

(சி/7458)

இளவாலையில்

## திருமறைக் கலாமன்றம்

யாழ். திருமறைக் கலாமன்றத்தின் கிளை ஒன்று 7-5-1999 அதாவது இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 4. 00 மணிக்கு இயக்குநர்

அருட் கலாநிதி நீ. மரியசேவியர்

அவர்களால் கல்லூரி வீதி, இளவாலையில் திறந்து வைக்கப்படவுள்ளது.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- பொறுப்பாளர்

திருமறைக் கலாமன்றம்
இளவாலை

((65519)

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியர்
திரு. மா. ஞானசேகரம் அவர்களின்
அன்பு மனைவி

### திருமதி மலர்விழி ஞானசேகரம்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தவர்களுக்கும் உறவினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம்,
யா/ சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி,

(65526)

## கண்ணீர் அஞ்சலி

### வீரகத்தி குணரத்தினம்

(பச்சிலைப்பள்ளி பிரதேச சபைத் தலைவர்)

அவர்களது அகால மரணத்தையிட்டு வலி. வடக்கு பிரதேச சபைத் தலைவரும் உறுப்பினர்களும் காரியாலய ஊழியர்களும் ஆகிய நாங்கள் எமது இதய அஞ்சலியை ஆழ்ந்த அனுதாபத்துடன் தெரிவிக்கின்றோம்.

தலைவர், உறுப்பினர்கள், காரியாலயஊழியர்கள்,
வலிகாமம் வடக்கு பிரதேச சபை.

காங்கேசன்துறை,
மல்லாகம்.

(இ/7460)

## கல்வி அபிவிருத்தி நிகழ்வு

யாழ்ப்பாணம், மே 7

கோப்பாய் நாவலர் வித்தியாலய கல்வி அபிவிருத்தி நிகழ்வுகள் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் வை. குணசேகரம் தலைமையில் நடைபெறும்.

யாழ். கல்வி வலயப்பணிப்பாளர் கலாநிதி நா. தணிகாசலம்பிள்ளை பிரதம விருந்தினராகவும், பிரதிக் கல்விப்பணிப்பாளர் என். வரதராஜன், கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் எம். பரஞ்சோதி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர்.

## நேர்முகப் பரீட்சை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், மே 7

யாழ்ப்பாண கல்வி வலயத்தில் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவிருந்த முதன்மை ஆசிரியர் பதவிக்கு புதியவர்களைத் தேர்ந்தெடுப்பது தொடர்பான நேர்முகப் பரீட்சை தவிர்க்க முடியாத காரணங்களால் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நேர்முகப் பரீட்சைக்கான புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-7)

## ஏரியல்

கல்வி நிலையம்
கல்வியன்காடு.
பொருளியல்
திரு. விக்கி
B. A. ( Ecn - Spi ) Hons
A/L 2001
புதிய பிரிவு
சனி, ஞாயிறு
2-30, 3-30 மணி.
G. A, Q,
பிரத்தியேக வகுப்புகளும்
ஆரம்பமாகவுள்ளன.
சனி, ஞாயிறு
3-30, 4-30

- நிர்வாகி

(65523)

## நாகம்ஸ்

சுன்னாகம்.

ரஜனி - குஷ்பு - சரத்பாபு
ஜனகராஜ் நடித்த

### அண்ணாமலை

காட்சிகள்: 11-00, 2-30
(புதியநேரம்)

(65525)

## ராஜா

யாழ்ப்பாணம்.
கார்த்திக் -ரம்பா
மற்றும் பலர் நடித்த

### உள்ளத்தை அள்ளித்தா

10-30, 2-00

(சி/7431)

## லிபேட்டி

தியேட்டர்
அச்சுவேலி
இன்று
T. ராஜேந்தரின்
மோனிசா
என் மோனலிசா
காட்சிகள்: 10-30, 2-30
Fax No. 070-212223
FOREIGN T.P. No.
0094 -70 -212223

(65506)

## இவருக்கு உதவுங்கள்

நீண்டகாலமாக சிறுநீரக நோயால் பீடிக்கப்பட்டுள்ள யாழ்ப்பாணம் கடை வீதிப் பிள்ளையார் கோயில் பிரதம குருவும், யாழ். சிவன் கோயில் குருக்களுமான விஜயகாந்தக்குருக்களுக்கு சிறுநீரக மாற்றுச் சிகிச்சைக்கு பரோபகாரிகளின் உதவியைக் கோருகிறார்.

இவர் இந்தியா சென்று சிறுநீரக மாற்றுச் சிகிச்சை பெறுவதற்கு எட்டு லட்சம் ரூபா தேவை என மதிப்பிடப்பட்டுள்ளது.

விஜயகாந்தக்குருக்களின் குடும்பம் மிகக் கஷ்டமான நிலையில் இருப்பதால் இந்த சிகிச்சைக்கு உதவுமாறு பெரு உள்ளம் கொண்டவர்களுக்கு அவரது குடும்பத்தினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

நன்கொடை அளிக்க விரும்புவோர் கொழும்பு கொட்டாஞ்சேனை இலங்கை வங்கிக் கிளையில் அவரது பெயரில் உள்ள கணக்கு இலக்கம் 1-016809-3 என்ற கணக்குக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

## NEW SCIENCE COLLEGE

கன்னாதிட்டி,
யாழ்ப்பாணம்.

### A/L 2000

கணக்கீடு
ஆசிரியர்: திரு. சி. தவராசா
உற்பத்திக் கணக்கு
ஆரம்பம்:- 07 - 05 - 99
வெள்ளி 4-00 p. m.

(65524)

## கண்ணீர் அஞ்சலி

06- 05- 99 அன்று அமரரான
பாடசாலை ஆசிரியை

### மலர்விழி ஞானசேகரன்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தவருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
யா/அராலி சரஸ்வதி மகாவித்தியாலயம்.

(65515)

## கண்ணீர் அஞ்சலி

எமது சகமாணவன்
க. கதிர்காமநாதரின் அன்புத் தந்தையார்
அமரர்

### சின்னத்தம்பி கந்தையா

சுதுமலை வடக்கு மானிப்பாய்

அவர்களின் மறைவையொட்டி அன்னாரது குடும்பத்தினருக்கும் உறவினருக்கும் எமது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்,

பட்டப்பின் கல்விப்பயிற்சிநெறி [முழுநேரம்]
மாணவர்கள், கல்வியற்றுறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,

65522

## மரண அறிவித்தல்

திருமதி

### பொன்னம்பலம் தங்கம்மா

பண்டத்தரிப்பைச் சேர்ந்த திருமதி பொன்னம்பலம் தங்கம்மா நேற்றுக் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னபலத்தின் அன்பு மனைவியும் திருமதி நாகம்மா(ஓய்வுபெற்ற ஆசிரியை), தெய்வானைப்பிள்ளை, பொன்னுத்துரை (யாழ். செயலகம்) அன்னம்மா (மன்னார்), திரவியம், பூமணி (கலைவாணி முன்பள்ளி ஆசிரியை), நாகேந்திரம் (ஜேர்மனி), கிரிபைராசா (டோகா) ஆகியோரின் அன்புத் தாயாரும் தர்மராஜா (ஓய்வுபெற்ற ஆசிரியர்), காலஞ்சென்ற இராமசாமி, கதிர்காமநாதன் (கட்டட ஓவசியர், மன்னார்), சரோஜினி தேவி (நவாலி), கோவிந்தசாமி, உருத்திரகணேசன், செல்வராணி (ஜேர்மனி), ஜெயலக்ஷ்மி ஆகியோரின் அன்பு மாமியாரும் அன்பரசி (வவுனியா), அருளரசன் (கோப்பாய் ஆசிரிய பயிற்சி கலாசாலை), அம்பிகா (A G A Office, சங்கானை), ஜீவானந்தன் (யாழ். பல்கலைக்கழகம்), குணசேகரன் (டோகா), மனோன்மணி (யாழ், பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி ஆசிரியை), மதுராங்கனி, பிறேமலத (ஆசிரியை, மன்னார் சித்திவிநாயகர் ), பிறேமரஞ்சினி (மன்னார் செயலகம்), முருகானந்தன் (மன்னார்), சசிகலா (மன்னார் கல்வித் திணைக்களம்), சிவானந்தன் (டோகா) சர்வானந்தன் (மன்னார்), சிவகாந்தி (யாழ். பல்கலைக்கழகம் கலைப்பீடம்), கிருபானந்தன் (அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்), செல்வக்குமரன் (டோகா), செல்வானந்தன் (டோகா), செல்வரூபன், செல்வசுதன், செல்வபவன் (பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயம்), துஷிதா (பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி), பிந்துஜா (பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி), துவாரகன் (பண்ணாகம் மெய்கண்டான் வித்தியாலயம்), லஜனி (ஜேர்மனி), லக்ஷன் (ஜேர்மனி), லாவண்யா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் சிவஜனனி (வவுனியா), சிவரூபன் (வவுனியா) ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (7-5-99) நண்பகல் 12. 00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் விளாவெளி மாயனத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பொ. பொன்னுத்துரை
(மகன்)

கலைவாணி வீதி,
வடலியடைப்பு,
பண்டத்தரிப்பு,

(சி/7462)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கு திமோர் சுயாட்சி ஒப்பந்தம் கைச்சாத்து

நியூயோர்க், மே 7

கிழக்குத் திமோருக்கு சுயாட்சி வழங்கும் தீர்வுத் திட்ட உடன்படிக்கையில் இந்தோனேசிய வெளிவிவகார அமைச்சர் அலி அலட்டாஸும் போர்த்துக்கல் வெளிவிவகாரத்துறை அமைச்சர் ஜேய்ம் காமாவும் நேற்று முன்தினம் கைச்சாத்திட்டனர்.

நியூயோர்க்கில் உள்ள ஐ. நா. தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற இறுதிப் பேச்சுக்களையடுத்து இரு அமைச்சர்களும் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டனர்.

ஐ. நா. பொதுச் செயலர் கோபி அனானின் முயற்சியை அடுத்தே இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளது.

போர்த்துக்கலின் காலனித்துவ நாடாக இருந்து வந்த கிழக்குத் திமோர் 1975 ஆம் ஆண்டின் பின்னர் இந்தோனேசியாவின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டது.

கிழக்குத்திமோரில் இருந்து போர்த்துக்கல் படை 1975 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் வெளியேறியதும் அங்கு தனது படைகளை அனுப்பிய இந்தோனேசியா கிழக்குத் திமோரை தனது நாட்டுடன் பலவந்தமாக இணைத்துக் கொண்டது.

உலக அரங்கில்

1976 ஆம் ஆண்டு இந்தோனேசியாவின் 27 ஆவது மாகாணமாக கிழக்குத் திமோர் சேர்த்துக் கொள்ளப்பட்டது. அதன் பின்னர் இந்தோனேசிய ஆட்சியில் இருந்து சுதந்திரம் வேண்டும் எனக் கோரி கிழக்குத்திமோர் மக்கள் போராடி வருகின்றனர்.

தற்போதைய தீர்வுத் திட்டத்தின்படி கிழக்குத்திமோருக்கு சுயாட்சி வழங்கப்படும் எனினும் கிழக்குத்திமோர் தொடர்ந்தும் இந்தோனேசியாவின் கீழேயே இருக்கும்.

இதேவேளை—

இந்தத் தீர்வுத் திட்டம் எதிர்வரும் ஒகஸ்ட் மாதமளவில் சர்வஜன வாக்கெடுப்புக்கு விடப்படும். வாக்கெடுப்பின்போது தீர்வுத் திட்டத்துக்கு எதிராக கிழக்குத் திமோர் மக்கள் வாக்களிப்பார்களானால் கிழக்குத் திமோருக்கு சுதந்திரம் வழங்கவும் இந்தோனேசியா இணக்கம் தெரிவித்துள்ளது.

(ஐ–6)

# பிரிவுத் துயரினால் யானை மரணம்!

புதுடில்லி, மே 7

குட்டி யானை ஒன்றின் மறைவுத் துயரை தாங்க முடியாத 70 வயதான யானை ஒன்று உயிரிழந்துள்ளது.

இந்தியாவின் லக்னோவில் உள்ள வேல்ஸ் இளவரசர் விலங்குகள் பூங்காவில் இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

தான் பாசத்துடன் அரவணைத்து கவனித்து வந்த 'கம்பாகளி' என்ற யானை உயிரிழந்ததை அடுத்து துக்கம் தாழாமல் 70 வயதுடைய 'டாமினி' என்ற பெண் யானையே நேற்று முன்தினம் உயிரிழந்ததாகப் பூங்கா நிர்வாகிகள் தெரிவித்தனர்.

(ஐ-6)

# மின் நிலையங்கள் தாக்கப்பட்டன

## சேர்பியா பிரதேசம் இருளில்

பெல்கிரேட், மே 6

சேர்பியாவின் பல பகுதிகளிலும் உள்ள மின்சார நிலையங்களை இலக்கு வைத்து நேட்டோ நடத்திய தாக்குதல்களினால் அப்பிராந்தியம் முழுவதும் இருளில் மூழ்கியதாக அறிவிக்கப்படுகிறது.

மின்சார விநியோகத்தை சீர்குலைப்பதற்காக விசேட குண்டுகள் பயன்படுத்தப்பட்டுள்ளதாக சேர்பிய அதிகாரி ஒருவர் தெரிவித்தார். யூகோஸ்லாவிய தலைநகர் பெல்கிரேட்டிற்கான மின் விநியோகமும் துண்டிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

# ரஷ்ய கவச வாகனம் இந்தியாவில் சோதனை

மொஸ்கோ மே 7

ரஷ்யத் தயாரிப்பான ரி-90 எவ்' ரக யுத்த கவச வாகனங்களை இந்தியாவின் ராஜஸ்தான் மாநில பாலை வனங்களில் சோதனை செய்து பார்ப்பதற்கான பேச்சுக்களில் ரஷ்யாவும் இந்தியாவும் ஈடுபடவுள்ளன.

ரஷ்யாவின் நவீன தயாரிப்பான இந்த கவச வாகனங்கள் தரைப்படையின் மிகப் பிரதானமான அம்சமாக இருக்கும் என்றும் —

இதன் செயற்றிறன் குறித்து பரிசோதனை செய்வதற்கு இந்தியாவின் ராஜஸ்தான் பாலைவனங்களைப் பயன்படுத்த ரஷ்யா எண்ணியுள்ளதாகவும் —

இது தொடர்பான பேச்சுக்களை நடத்த இந்த மாதக் கடைசியில் ரஷ்ய பாதுகாப்புக்குழு ஒன்று இந்தியாவுக்கு செல்லும் என்றும் —

மொஸ்கோவிலுள்ள பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர்.

(ஐ - 6)

# இந்திய மீனவருக்கு உதவ கடலோர விமானத் தளம்

சென்னை, மே 7

மன்னார் வளைகுடாப் பகுதியில் கடலில் மீன் பிடிக்கச் செல்லும் சமயம் காணாமல் போகும் மீனவர்களை உடனடியாகக் கண்டு பிடிப்பதற்காக தூத்துக்குடிக்கு அருகேயுள்ள வாகைக்குளத்தில் கடலோர பாதுகாப்புப் படையினரின் விமானத்தளம் ஒன்றை அமைப்பது குறித்து இந்திய அரசாங்கம் பரிசீலனை செய்து வருகின்றது.

இந்திய கடலோர காவற்படைத்தளபதி செய்தியாளர்களிடம் பேசியபோது இதனைத் தெரிவித்தார்.

இதேவேளை —

இலங்கைக் கடற்பகுதியில் தமிழக மீனவர்களும் மீன் பிடிக்கும் உரிமையைப் பெற்றுத் தருமாறு தமிழக அரசு இந்திய மத்திய அரசைக் கோரியுள்ளது என்றும் —

இந்தக் கோரிக்கை மத்திய அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளதாகவும் —

தமிழக மீன் வளத்துறை அமைச்சர் திருமதி ஜெனீபர் சந்திரன் தமிழக சட்டப்பேரவையில் நேற்று முன்தினம் தெரிவித்தார்.

மீன் வளத்துறை மானிய கோரிக்கை மீதான விவாதத்துக்குப் பதிலளித்துப் பேசும் போது அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

1976 ஆம் ஆண்டு ஏற்பட்ட ஒப்பந்தப்படி இலங்கைக் கடற்பகுதியில் நெடுந்தீவுக்கு தெற்குப் பகுதியில் இலங்கை மீனவர்கள் மீன் பிடிப்பதற்கு உரிமை இருப்பதைச் சுட்டிக்காட்டி தமிழக மீனவர்களுக்கும் அந்த உரிமை வழங்கப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

[ஐ-6]

## யூகோஸ்லாவியா மீதான

# தாக்குதல் தீவிரமாகும்; கிளின்ரன் அறிவிப்பு!

யூகோஸ்லாவியா மீது நேட்டோ நடத்தும் வான் விழித் தாக்குதல்கள் ஜனாதிபதி மிலோசெவிக் நேட்டோ அமைப்பின் அமைதிக்கான தீர்வுத் திட்டத்தை ஏற்றுக் கொள்ளும் வரையில் தொடர்ந்து தீவிரப்படுத்தப்படும்.

அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரன் ஜேர்மனில் நிலை கொண்டுள்ள நேட்டோவின் அமெரிக்கப் படையினரிடையே உரையாற்றும்போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கொசோவோவில் சேர்பியப் படையினரின் நடவடிக்கைகள் அனைத்தும் கட்டுப் படுத்தப்பட்டு அங்கு வழமையான நிலைமைகள் உருவாக்கப்படும்.

வான் வழித்தாக்குதல்கள் தற்போது பயனளித்து வருகின்றன. யூகோஸ்லாவிய தலைமையும் படைகளும் வீழ்ச்சி அடையும் நிலையில் உள்ளன என்றும் அதிபர் கிளிரன் நேட்டோ படைகளின் தளபதி வெஸ்லி கிளார்க்கிடம் கூறினார்.

(ஐ-6)


யா / விக்ரோறியாக் கல்லூரி, சுழிபுரம்

**பழைய மாணவர் சங்கம்**

**பொதுக் கூட்ட அறிவித்தல்**

காலம்: 09—05—99 (ஞாயிறு) மு. ப. 10. 00 மணி
(புதிய நேரம்)

இடம்: கல்லூரி பிரதான மண்டபம்.

தலைமை: திரு. வே. நாகராசா அவர்கள்.

அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது குறித்த நேரத்தில் சமுகமளிக்குமாறும், புதிய அங்கத்துவம் பெற விரும்பும் பழைய மாணவர்கள் நிர்வாகத்தினருடன் தொடர்பு கொள்ளுமாறும் கேட்டுக்கொள்கின்றோம்.

தி. உதயசூரியன்,
கௌரவ செயலாளர்.

பழைய மாணவர் சங்கம்,
விக்ரோறியாக் கல்லூரி,
சுழிபுரம்.

(65512)



**நகராட்சிமன்றம் வல்வெட்டித்துறை**

**கேள்வி அறிவித்தல்**

கீழ்க்குறிப்பிடப்படும் வேலைகளுக்கான கேள்விகள் 18 - 05 - 1999 ஆம் திகதி முற்பகல் 10. 00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

ஆர்வமுடையோர் உரிய கேள்விவைப்புப்பணத்தையும் கேள்விப்படிவக் கட்டணத்தையும் செலுத்தி கேள்விப்பத்திரத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

| வேலை விவரம் | கேள்விப் படிவக் கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் |
|---|---|---|
| 1. வேம்படி தொனியம்மை வீதி, திருத்தம் | 300/- | 1000/- |
| 2. ஆதிகோவில் ஒழுங்கை திருத்தம் | 300/- | 1000/- |

கேள்விப்பத்திரங்கள் 1999 ஆம் ஆண்டு மே மாதம் 17 ஆம் திகதி நண்பகல் 12. 00 மணிவரை வழங்கப்படும்.

மேலதிக விவரங்களை இந்த அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

எம். கே. சிவாஜிலிங்கம்
தலைவர்
நகராட்சிமன்றம் வல்வெட்டித்துறை

நகராட்சிமன்ற அலுவலகம்,
வல்வெட்டித்துறை, 03 - 05 - 1999.

(சி/7457)



**பாராட்டி வாழ்த்துகிறோம்**

**யா/ இடைக்காடு மகாவித்தியாலயம்**

இடைக்காடு, அச்சுவேலி.

க. பொ. த (சா/த) பரீட்சைப் பெறுபேறு - 1998, டிசெம்பர்

மேற்படி பரீட்சையில் மிகவும் சிறந்த பெறுபேறுகளுடன், சித்தியடைந்த பின்வரும் மாணவர்கட்கும் அவர்களுக்குச் சிறந்த முறையில் கல்வி கற்பித்த ஆசிரியர், அதிபர் அவர்கட்கும் எமது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

| மாணவர் பெயர் | பெறுபேறுகள் விவரம் |
|---|---|
| தாமோதரன் வினுஜா | 7D, 1C |
| இளையதம்பி காயத்திரி | 7D, 1C |
| ஸ்ரீஜெயந்திநாதன் நந்தினி | 7D, 1S |
| கைலைநாதன் தயாபரன் | 6D, 2C |
| கந்தசாமி ரமணன் | 6D, 1C, 1S |
| சிவநேசன் பலதாரணி | 6D, 1C, 1S |
| ஜெயக்குமரபதி துஷ்யந் | 5D, 2C, 1S |
| தவராஜலிங்கம் நரேந் | 5D, 2C |
| சிதம்பரப்பிள்ளை கஜிபன் | 5D, 2C |
| அமுதலிங்கம் திரிகரன் | 2D, 5C, 1S |
| குமாரதாசன் செந்தூரன் | 2D, 4C, 2S |
| வேலாயுதபிள்ளை ஐங்கரன் | 2D, 2C, 3S |
| நடராசா றசிலா | 1D, 6C |
| இராமச்சந்திரன் ஸ்ரீரூபன் | 1D, 4C, 2S |
| செல்வநாயகம் அருட்செல்வி | 1D, 4C, 2S |

1) பரீட்சைக்குத் தோற்றியோர்: 38
2) க.பொ.த (உ/த) வகுப்பிற்குத் தகுதியானோர்; 20
3) பரீட்சையில் சித்திபெற்றோரின் நூற்றுவீதம்: 56.23%

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பாடசாலை பழைய மாணவர் சங்கம்.

(65511)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

சோமசுந்தரக்குருக்கள் பரமேஸ்வரன் ஆகிய எனது விசேட அடையாள அட்டை நல்லூர் வீரமாகாளி அம்மன் கோயிலுக்கும், பன்றிக்கோட்டுப்பிள்ளையார் கோயிலுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 420, கே. கே. எஸ். வீதி. யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் ஒப்படைத்து உதவவும்.
[65504]

முருகேசு கந்தையா ஆகிய எனது விசேட அடையாள அட்டையும், சில ஆவணங்களும் பருத்தித்துறை இ. போ. ச. பஸ்ஸில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து 22/3, புதிய செங்குந்தா வீதி, திருநெல்வேலி கிழக்கு என்ற விலாசத்தில் ஒப்படைத்து உதவவும்.
[65498]

## கண்காட்சி

யாழ்ப்பாணம், மே 7

பருத்தித்துறை மறைக் கோட்டத்தினால் நடத்தப்படும் யூபிலி 2000 மாபெரும் கண்காட்சி நாளை சனிக்கிழமையும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் காலை 9 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை பருத்தித்துறை புனித தோமையார் பெண்கள் பாடசாலையில் நடைபெறவுள்ளது. (ஐ-ரி)

## தீக்காயங்களுடன் சடலம் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம், மே 7

தனக்குத்தானே தீ மூட்டி எரிந்துஉயிரிழந்ததாகத் தெரிவித்து நேற்று முன்தினம் யாழ். ஆஸ்பத்திரியில் பெண் ஒருவரின் சடலம் ஒப்படைக்கப்பட்டது.

வண்ணார்பண்ணை, பிரப்பங் குளம் வீதியைச் சேர்ந்த கணேசையர் கங்கேஸ்வரி [வயது 51] என்பவரே உயிரிழந்தவராவார்.

உடல் முற்றாக எரிந்து கருகிய நிலையில் காணப்பட்டது. சடலம் மரணவிசாரணையின் பொருட்டு ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.
(ஐ-15)

### இலகு திருமண சேவை

1964 சுவாதி, படித்தவர் வாய்பேசமாட்டார். சிறு அரச உத்தியோகத்தருக்கு மணப்பெண் தேவை. வாய் பேசாதவர்களும் தொடர்பு கொள்ளலாம். தொடர்பு: ஞாயிறுகளில் துரைவிமலா. K. K. S. வீதி, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.
[65402]

### அதிபர் பதவிப் படிவம்

இலங்கை அதிபர்களசேவையில் 1 ஆம், 2 ஆம், 3 ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்பதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை விண்ணப்பப் படிவங்கள் விற்பனையாகின்றன, பாரதி, 430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (சி/7348)

### தவறிவிட்டது

223, கலைமகள் வீதி, நல்லூர் வடக்கைச் சேர்ந்த இரத்தினம் அன்னைபூபதியின் தேசிய அ. அட்டை (307951037V), விசேட அ. அட்டை என்பன கடந்த 10 ஆம் திகதி காலை கலைமகள் வீதிக்கும், நல்லூர் கோயிலுக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து மேற்படி முகவரியில் ஒப்படைக்கவும். [65497]

### தங்குமிடவசதி

சகல வசதிகளும் அமைந்துள்ள வீட்டில் கல்வி பயிலும் மாணவர் அல்லது மாணவிகள் இருவர் தங்கி இருக்கக்கூடிய தனி அறை ஒன்று தளபாடங்களுடன் வாடகைக்கு உண்டு. தொடர்பு: இல. 71/10, சீனியர் லேன், வண்ணார்பண்ணை.
[65487]

கொக்குவில்

## லயன்ஸ் கழகத்தினரால்

## இலவச கண் பரிசோதனை, மருத்துவ பரிசோதனை

நாள்: 09—05—1999
நேரம்: காலை 8.30 (SLT)
இடம்: உயரப்புலம் பாரதி சனசமூக நிலையம்
ஆனைக்கோட்டை.

கண்பரிசோதனை செய்பவர்கள்:
எரிக்கனேஸ்
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்,
(சி/7456)

## பதவி வெற்றிடம்

கண்ணிவெடி அகற்றுவதற்கான

செயற்பாட்டுக்குப் பொறுப்பான அதிகாரியை நியமிப்பதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரர் இந்தச் செயற்பாட்டினை ஒருங்கிணைக்கவும், திட்டமிடவும் கூடிய மேம்பட்ட ஆற்றலும் நல்ல அனுபவமும் உடையவராக இருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மேற்படி தகுதிகளை உடையவர்கள் தங்களின் சுயவிவரங்களுடன் செயலக திட்டமிடல் பகுதியுடன் தொடர்பு கொள்ளவும்.

அரச அதிபர்,
யாழ். மாவட்டம்.

(சி/ 7453)

## A/L 2001

புதிய பிரிவு
ஆரம்பம்: 08 - 05 - 99 [காலை 8 மணி]
அனுமதிகள் வழங்கப்படுகின்றன

**புதிய உயர் கல்லூரி,**
ஆரியகுளம் சந்தி, யாழ்.
(65495)

ஏற்றுமதித் தரத்திலான

## லோட்டஸ் ரயர்கள்

10 ரயர் ரியூப் ரூ 2,400/-
மொத்தமாகப் பெற்றுக்கொள்ள

**விவேகானந்தா அச்சகம்**
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(சி/7437)

கைதடி சைவ ஐக்கிய சங்கம்

## 77 ஆவது வருடாந்தப் பொதுக் கூட்டம்

தலைவர்: திருவருட் செல்வர் வ. சுப்பையா
காலம்: 10 – 05 – 99 திங்கட்கிழமை பிற்பகல் 5 மணி
இடம்: கைதடி இணுங்கித் தோட்டம்
கந்தசுவாமி ஆலய மண்டபம்.
காலை - 7.00 மணி தொடக்கம் திருநாவுக்கரசு நாயனார் தேவாரம் முற்றோதலும் குரு பூசையும்.
குறிப்பு: புதுவருட நிர்வாகிகள் தெரிவு இடம் பெறுவதால் உறுப்பினர் தவறாது சமூகமளிக்கவும்.

(சி/7454) — தலைவர்

## நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அன்புடையீர்!

[ 9 — 4 — 99 ] வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவர்

## அமரர் க. சி. செல்லப்பா

[ தாமோதரா ஸ்ரோர்ஸ் உரிமையாளர் — மன்னார் ]

அவர்களது இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டும் எமக்குப் பல விதங்களில் உதவி புரிந்து எமது துன்பம் துடைத்தவர்களுக்கும். நேரில் கலந்து கொள்ள முடியாது தபால், தந்தி மூலம் எமக்கு ஆறுதல் தந்தவர்களுக்கும், உற்றார், உறவினர், அயலவர், நண்பர் யாபேருக்கும் எம் நன்றியைத் தெரிவிப்பதோடு இன்று பிரமாதி வருஷம் சித்திரை மாதம் 24 ஆம் நாள் [ 07 — 05 — 1999 ] வெள்ளிக்கிழமை காலை 11 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறவிருக்கும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகளில் கலந்து பிரார்த்தித்து மதிய போசனத்திலும் பங்கு கொள்ளுமாறு உற்றார், உறவினர், அயலவர், நண்பர் மற்றும் யாபேரையும் அன்புடன் வேண்டிக் கொள்கின்றோம்.

பிரிவால் துயருறும்
**மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

இணுவில் மேற்கு,
இணுவில்
[65493]

# பாராட்டுகின்றோம்

## யா/உசன் இராமநாதன் ம. வி.

மிருசுவில்

க. பொ. த. (சா/த) பரீட்சை 1998 இல் சித்தியெய்திய மாணவர்களையும், அவர்களை வழிநடத்திய அதிபர், ஆசிரியர்களையும் பாராட்டுகின்றோம்.

**பரீட்சைக்கு தோற்றியோர்:** 63
**க. பொ. த. (உ/த) - க்கு தகுதி பெற்றோர்:** 42 67%

| பாடம் | சித்தியடைந்தோர் | சித்தி வீதம் | C | D |
|---|---|---|---|---|
| சைவசமயம் | 45 | 84 % | 35 | 08 |
| கிறிஸ்தவம் | 09 | 100 % | 08 | — |
| தமிழ் மொழி | 58 | 92 % | 29 | 22 |
| ஆங்கில மொழி | 03 | 05 % | — | — |
| விஞ்ஞானம் | 54 | 86 % | 31 | — |
| கணிதம் | 45 | 72 % | 22 | 05 |
| சமூகக்கல்வி | 49 | 78 % | 26 | 04 |
| சங்கீதம் | 23 | 56 % | 13 | 01 |
| சித்திரம் | 12 | 67 % | 01 | 01 |
| நடனம் | 07 | 38 % | 04 | — |
| விவசாயம் | 29 | 100 % | 18 | 10 |
| வர்த்தகம் | 08 | 89 % | 05 | — |
| மனையியல் | 19 | 76 % | 12 | — |

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பெற்றோர்கள்.

யா / உசன் இராமநாதன் மகா வித்தியாலயம்,
மிருசுவில்.
(65492)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராணுவத்துக்கு தமிழ் இளைஞரை சேர்ப்பது வேடிக்கையான விடயம்

## ஜோசப் பரராஜசிங்கம் கூறுகிறார்

கொழும்பு, மே 7

தற்போதைய சூழ்நிலையில் தமிழ் இளைஞர்கள் இராணுவத்தில் சேர்வது என்பது முடியாத காரியம். அதேவேளை—தமிழ் இளைஞர்களை அரசு இராணுவத்தில் சேர்க்கப் போகின்றது என்பதும் ஒரு வேடிக்கைக்குரிய நிகழ்வேயாகும்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் யோசப் பரராஜசிங்கம் நேற்று முன்தினமிரவு பி. பி. ஸிக்கு வழங்கிய பேட்டியில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இராணுவத்தினர் தமிழர்களுக்கு வகை தொகையற்ற தொல்லைகளைத் கொடுக்கின்றார்கள். கைது செய்கின்றார்கள். கொலை செய்கின்றார்கள்; அதைவிடத் தமிழர்கள், தமிழ் இளைஞர்கள் என்றால் அரசே வேறு கண்கொண்டு நோக்குகின்றது. இவ்வாறான நிலையில் தமிழ் இளைஞர்கள் எவ்வாறு இராணுவத்தில் சேர்வார்கள்?

சிங்கள இளைஞர்கள் தற்போது படையில் இணைவதில்லை என்பதாலும்—

தமிழ் இளைஞர்கள் இணைந்தால் தமிழர்களும் இராணுவத்தில் இருக்கின்றார்கள் என்று வெளி உலகுக்குக் காட்ட முடியும் என்பதாலும்—

தமிழ் இளைஞர்களை இராணுவத்தில் சேர்ப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கலாம்.

கடந்த 8 வருடங்களில் மட்டும் வடக்கு கிழக்கு மாகாணத்தில் படையினர் 10 ஆயிரம் பேரைக் கொன்றுள்ளனர்.

அவசரகாலச் சட்டம், பயங்கரவாதச் சட்டம் என்பவற்றின் கீழ் கைது செய்யப்பட்ட சுமார் ஆயிரத்து 800 தமிழ் இளைஞர்கள் எந்த வித விசாரணைகளுமின்றித் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள். தினமும் தமிழர்கள் கைது செய்யப்பட்டு வருகின்றார்கள்.

இப்படியான சூழ்நிலையில் எவ்வாறு தமிழ் இளைஞர்கள் இராணுவத்தில் இணைவார்கள்? அவ்வாறு சேர்வதாக இருந்தாலும் அவர்கள் சி. ஐ. டி மற்றும் என் ஐ. டி. போன்ற புலனாய்வுப் பிரிவுகளின் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டியவர்களாக இருக்கின்றார்கள்.

எனவே தமிழ் இளைஞர்கள் இராணுவத்தில் சேர்வது என்பது முடியாத ஒரு காரியம். தமிழ் இளைஞர்களை அரசு இராணுவத்தில் சேர்க்கப்போகின்றது என்பதும் ஒரு வேடிக்கையான நிகழ்ச்சி என்றுதான் நான் கருதுகின்றேன்.

இப்படி அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-6)

# ராணுவ ஆள்சேர்ப்பு அரசின் கேலிக்கூத்து!

## யாழ். எம். பி. தெரிவிப்பு

கொழும்பு, மே 7

இராணுவ அமைப்பில் தமிழ்மக்கள் நம்பிக்கை வைக்க முடியாத நிலையே இன்றைய பிரச்சினை! அப்படியிருக்கும் போது தமிழ் இளைஞர்களை அந்த அமைப்பில் சேரும்படி எப்படிக் கேட்க முடியும்?

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சந்திரகுமார் மேற்கண்டவாறு கேள்வி எழுப்பியுள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது:-

தமிழ்மக்களுக்கு நியாயமான தீர்வு கிடைத்து அதற்கூடாக தமிழ்மக்களைப் பாதுகாக்கும் அமைப்பு ஒன்று உருவாகும் போதுதான் அதில் தமிழ் இளைஞர்கள் இணைந்து கொள்வார்கள். தற்போதுள்ள நிலையில் தமிழ் இளைஞர்கள் இராணுவத்தில் சேர்வது நடைமுறைக்கு சாத்தியமான விடயம் அல்ல.

வெளிநாடுகளுக்கு இந்த விடயத்தைக் காட்டி, அந்த நாடுகளைக் கண்துடைக்கும் கேலிக்கூத்தான நடவடிக்கையிலேயே அரசு சடுபட்டுள்ளது.

தமிழ் இளைஞர்கள் வேலை வாய்ப்புப் பெற பாதுகாப்பு அனுமதி பெறுவது முதல் 10 வயதுச் சிறுவனும் அடையாள அட்டை பெறவேண்டும் என்ற கட்டுப்பாடு வரை — தமிழ் இளைஞர்கள் மீது ஒரு பக்கம் நெருக்குதல் செய்யும் அரசாங்கம் மறுபக்கத்தில் இராணுவத்துக்குக தமிழர்களைத் சேர்ப்பதாத் முரண்பாடாகச் தகவல் வெளியிட்டுள்ளது.

இந்த படைச் சேர்ப்பில் தமிழ் இளைஞர்கள் இணைய மாட்டார்கள் என நம்புகிறோம்.

என்று அவர் தெரிவித்தார். [ஐ-3]

## 'யோர்க் கோஷம்' மூலம்

# விடுவிக்கப்பட்ட பகுதிக்கு உரம் அனுப்ப அனுமதி

படையினரால் கைப்பற்றப்பட்டுள்ள இரணை இலுப்பைக்குளம், மடு ஆகிய பகுதிகளுக்கு கட்டுப்பாடற்ற முறையில் உரம், மண்எண்ணெய் அனுப்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது

வவுனியா ஜோசப் முகாமில் நேற்று முன்தினம் காலை நடந்த பாதுகாப்பு மாநாட்டில் இந்த அனுமதி அளிக்கப்பட்டது.

வன்னிப் படைகளின் கட்டளை அதிகாரியான மேஜர் ஜெனரல் லயனல் பலகல்ல தலைமையில் நடந்த இந்த மாநாட்டில் வவுனியா, மன்னார் அரச அதிபர்கள், படை அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இங்கு எடுக்கப்பட்ட முடிவுகள் வருமாறு—

★ மடு, இரணை இலுப்பைக்குளம் ஆகிய இடங்களில் உள்ள வாகனங்களைப் பதிவு செய்வதற்கான பணி ஒரு மாத காலத்தில் பூர்த்தி செய்து, அந்த வாகனங்களுக்கு பெர்மிட் மூலம் பெற்றோல், டீசல் வழங்குதல்.

★ மடு மற்றும் இராணுவம் கைப்பற்றிய பகுதிகளில் தங்கியுள்ள இடம்பெயர்ந்த மக்களை அவர்களது சொந்த இடங்களில் மாத இறுதிக்குள் மீளக் குடியமர்த்துவதற்கான பணிகளைத் துரிதப்படுத்தல். (ஐ-3-21-164)

## வலிகாமம் வடக்கு பிரதேசசபை, காங்கேசன்துறை
(மல்லாகம்)

# கேள்வி அறிவித்தல்

கீழ்க் குறிப்பிடும் வேலைகளுக்கான கேள்விகள் 20-05-99 ஆம் திகதி முற்பகல் பத்துமணி வரை ரூபா 200.00 ற்கு மேல் அரசாங்கத் திணைக்களங்களில், இக்ராட் நிறுவனத்தில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரரிடமிருந்து என்னால் ஏற்றுக் கொள்ளப்படும். இந்தக் கேள்விகள் 20-05-1999 அன்றே 11.00 மணிக்கு திறந்து பரிசீலிக்கப்படும்.

கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப் பிரதியை ''தலைவர், வலி. வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை, மல்லாகம்'' என்ற முகவரிக்கும், இணைப்பிரதியை ''பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர், செட்டித்தெரு, யாழ்ப்பாணம்'' என்ற முகவரிக்கும் எதிர்வரும் 20-05-1999 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் எழுதப்படல் வேண்டும்.

| வேலைகளின் பெயர் | வைப்புப் பணம் | படிவப் பணம் |
|---|---|---|
| 1. மல்லாகம் சந்தை கட்டடத்தொகுதி | 5,000.00 | 500.00 |
| 2. இக்கிராணை மதகு மீள அமைத்தல் | 1,000.00 | 500 00 |

மேற்படி வைப்புப் பணத்தையும், கேள்விப்படிவக் கட்டணத்தையும் செலுத்துவதன் பேரில் 18-05-1999 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிவரை எம்மால் வழங்கப்படும் படிவங்களில் மட்டும் கேள்விகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். கேள்விப் படிவக் கட்டணங்கள் மீளளிக்கப்படமாட்டாது. இது சம்பந்தமான மேலதிக விவரங்களை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

சு. ஸ்ரீபாஸ்கரன்,
தலைவர்.

வலி. வடக்கு பிரதேச சபை,
தலைமை அலுவலகம்,
காங்கேசன்துறை, மல்லாகம்.

(சி/7444)

# அரசின் ஆள்சேர்ப்புத் திட்டம் படுதோல்வியாகவே முடியும்!

## சித்தார்த்தன் கருத்து

கொழும்பு, மே 7

நாட்டில் இன்று நிலவும் நெருக்கடியான சூழ்நிலையில்—அரசியல் தீர்வு ஒன்று ஏற்படாமல்—தமிழ் இளைஞர்கள் இராணுவத்தில் இணைந்து போரில் ஈடுபடுவார்கள்என நான் நம்பவில்லை.

புளொட் அமைப்பின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் பி. பி. ஸிக்கு வழங்கிய பேட்டி ஒன்றில் இவ்வாறு தெரிவித்தார்.

இராணுவத்தில் தமிழ் இளைஞர்களை இணைப்பதன் மூலம் தமிழர்களும் இராணுவத்தில் இருக்கின்றார்கள் என்று உலகுக்குக் காட்ட முடியும்—என்பதாலும்—

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போராட்டத்தில் ஒரு தீவிரத்தைக் காட்டுவதற்குத் தமிழ் இளைஞர்களைப் பயன்படுத்தலாம் என்று கருதுவதாலும்—

இராணுவத்தில் தமிழ் இளைஞர்களைச் சேர்த்துக் கொள்வதற்கு அரசு முன்வந்துள்ளது என நினைக்கின்றேன்.

இதுவரை எந்தவொரு இளைஞனோ, பெண்ணோ விண்ணப்பித்ததாகத் தெரியவில்லை. எனவே இந்த முயற்சி படுதோல்வியில் முடியும் என்றுதான் நான் கருதுகின்றேன்.

தெற்கிலே இருந்து இளைஞர்கள் படையில் இணைவதற்குக் காரணம் இது ஒரு வேலை என்று அவர்கள் கருதுவதால்தான். ஆனால் வடக்கில் அவ்வாறான நிலை இல்லை. வேலை என்று கருதி தமிழ் இளைஞர்கள் இராணுவத்தில் சேர்வார்கள் என்று நான் கருதவில்லை. இன்றைய நிலையில் அரசியல் தீர்வு ஒன்று ஏற்படாமல் தமிழ் இளைஞர்கள் போரில் ஈடுபடுவார்கள் என்று நான் நம்பவில்லை— என்று அவர் அந்தப் பேட்டியில் மேலும் தெவித்தார். (ஐ-6)

## குழுக் கூட்டம்

மாவட்ட விவசாயக் குழுக் கூட்டம் எதிர்வரும் 10 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு யாழ். செயலகத்தில் நடைபெறும். (தி-5)

# வாசகர் திருமுகம்

## நொந்தவர்களுக்கு உதவுங்கள்

6-04-99 திகதிய உதயன் பத்திரிகையில் வாசகர் திருமுகம் பகுதியில் ''யாழ் ஆலயங்கள் உதவக் கூடாதா?'' என்னும் தலைப்பின் கீழ் வந்த விடயம் எல்லோரையும் சிந்திக்க வைக்கச் செய்யும் ஒன்றாகும். வரவேற்கின்றோம்.

ஆனால் இதோடு சம்பந்தப்பட்ட எத்தனை புண்ணியவான்களின் உள்ளத்தைத் தொடுமோ என்பது சந்தேகமே. ஊரார் வீட்டுப் பணத்தில் புகழ் சேர்க்கும் புண்ணியவான்களுக்கும், போட்டி போட்டு நிர்வாகம் நடத்தும் ஆலய பரிபாலன சபைகளுக்கும் இது எப்படிப் புரியும்?

குடாநாட்டுக்குள்ளேயே எத்தனை ஆலயங்கள் வழிபாட்டுச் சுதந்திரம் இன்றி இருக்க, உணவிற்கு வழியின்றி மக்கள் பசியுடன் இருக்க, கேளிக்கைகளும், ஆடம்பரங்களும் மிகையான செலவுகளும் சொல்லில் அடங்கா.

நாலு, ஐந்து கார்கள், கழுத்தில் பளபளப்புக்கள். ரீ. வி., கமரா என்று ஆடம்பரத்திலே திளைக்கின்றார்கள் ஒரு சாரார். நொந்துபோயுள்ளவர்களுக்கு உதவ முன்வரவேண்டும். இதற்கான முயற்சியில் நேர்மையான தொண்டு மனப்பான்மை உள்ளோர் ஈடுபடுவார்களா?

''நடமாடும் நம்பர்க்கு ஒன்று ஈயின்
படமாடும் தெய்வம் காண்.

அரியாலை.

சந்திரசீலன்.

## காரைநகரில் தபாற் சேவை

யாழ். தபாலகத்தில் தரம் பிரிக்கப்பட்டு புறப்படும் காரைநகருக்கான தபால்கள் ஊர்காவற்றுறை பஸ்ஸில் சென்று பின்னர் வலளத்திற்கு தவம் கிடந்து கடல்கடந்து அன்று முழுவதும் தபாற்கந்தோரில் கிடந்து அடுத்தநாளே மக்களுக்கு விநியோகிக்கப்படுகின்றன, இதேபோன்று இவ்வூரில் சேகரிக்கப்படும் தபால்களும் கந்தோரில் இரவு முழுவதும் துயின்று அடுத்த நாள் மாலையே யாழ்ப்பாணம் சென்றடைகிறது.

இன்று காரைநகரில் இருந்து சர்வதேசங்களுடனும் நொடிப்பொழுதில் தனியார் தொலைபேசியில் தொடர்பு கொள்ளலாம். ஆனால் முன்னைய காலத்தில் இருந்ததுபோல தொலைபேசி தபாற்கந்தோரில் இல்லை. இதுமட்டுமா? இக்கந்தோரில் பெரும்பாலான முத்திரைகளுக்குக்கூடத் தட்டுப்பாடு நிலவுகிறது.

இங்கு கடமையாற்றும் பெரும்பான்மையான ஊழியர்கள் வெளியூர்களில் வசிப்பவர்கள். காலை 9 மணிக்கு வேலைக்கு வருவார்கள் பழைய கடிதங்களை விநியோகிப்பார்கள், பின்னர் இவ்வூரில் மலிவாகக் கிடைக்கும் மீன், கோழி, ஆடு, நெல், பனங் கிழங்குகள் போன்ற உணவு வகைகளையும் ஊமல், பனம் மட்டை போன்ற விறகு வகைகளையும் சேகரித்துக் கொண்டு உடன் திரும்பி விடுவார்கள். கிராமத்தின் அபிவிருத்தியில் தபால் தந்தித் தொலைபேசிச் சேவை எவ்வளவு முக்கியம் என்பதை இவர்கள் கவனிபபதில்லை.

காரைநகருக்கும் யாழ்ப்பாணத்திற்குமிடையே தினமும் மூளாய் ஊடாக நேரடி பஸ்சேவையுண்டு. கடிதப் பொதிகளை அன்றன்றே குறிப்பிட்ட நேரடி பஸ் மூலம் அனுப்பி இப்போது நத்தை வேகத்தில் நடைபெறும் தபாற்சேவையை விரைவுபடுத்த வேண்டும். அத்தோடு காரைநகர் தபாலகத்திற்கு தொலைபேசி வசதியும் ஏற்படுத்தப்பட வேண்டும். செய்வார்களா அதிகாரிகள்?

சி. கதிராசி.

காரைநகர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணுவில்

## விசாலாட்சி சமேத விஸ்வேஸ்வர சுவாமி

திருக்கோயில்

## அலங்கார உற்சவம்

இன்று 7. 5. 99 — வெள்ளி 7ஆம் திருவிழா
சந்திரசேகர பட்டம்
11. 5. 99 — செவ்வாய் 11ஆம் திருவிழா
கைலாச வாகனம்
12. 5. 99 — புதன் பிச்சாடன உற்சவம்
13. 5. 99 — வியாழன் சப்பறத் திருவிழா
14. 5. 99 — வெள்ளி தேர்த் திருவிழா
15. 5. 99 — சனி தீர்த்த உற்சவம்
மாலை — ஊஞ்சல்
16. 5. 99 — வைரவர் பூஜை

பிரதம குரு
தா. வாசுதேவக்குருக்கள்

ஆலயக் குரு
வா. ஜெயவஸ்ந்தாங்கசர்மா

ஆதீனகர்த்தா
சீ. பரமேஸ்வரன்

சுபம் (65475)


## சைவ மாநாடு முதல் நாள் நிகழ்ச்சி

யாழ். பல்கலைக்கழக சைவ சபை நடத்தும் மூன்று நாள சைவ மாநாடு இன்று வெள்ளிக் கிழமை காலை 8 மணிக்கு ஆரம்பமாகிறது.

முதலாம் நாள் நிகழ்ச்சிகள் இன்று காலை யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறைத்தலைவர் பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ண ஐயர் தலைமையில் இடம்பெறும்.

யாழ். மாநகர ஆணையாளர் வே. பொ. பாலசிங்கம் மங்கள விளக்கினை ஏற்றி வைப்பார். அருளுரையை நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளும், ஆசியுரையை சிவஸ்ரீ தா. மகாதேவக்குருக்களும், வரவேற்புரையை ஆசிரியமணி அ. பஞ்சாட்சரமும் நிகழ்த்துவர்.

தொடர்ந்து "அன்றாட வாழ்க்கையில் சைவசித்தாந்தம்" என்ற பொருளில் திருமதி கலைவாணி இராமநாதனும் 'நானோ இதற்கு நாயகமே' என்ற பொருளில் சிவ. மகாலிங்கமும் 'ஆலயக் கிரியைகள்—சமகாலநோக்கு' என்ற பொருளில் சிவஸ்ரீ பால சர்வேஸ்வரக்குருக்களும் விரிவுரை நிகழ்த்துவர்.

மாலை நிகழ்ச்சிகள் பிற்பகல் 2.30 மணிக்கு பலாலி ஆசிரிய கலாசாலை அதிபர் சோ. பத்மநாதன் தலைமையில் நடைபெறும்.

தொடர்ந்து பலாலி ஆசிரிய கலாசாலை மாணவர்கள் ஒன்றிணைந்து வழங்கும் 'பெரியபுராணம் பன்முகப் பார்வை' என்ற பொருளிலான கருத்துரைத் தொடரும், திருமதி சுகந்தினி முரளிதரன் வழங்கும் 'கலை வளர்க்கும் சிவாலயங்கள்' என்ற பொருளிலான விரிவுரையும், மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை மாணவர்கள் வழங்கும் 'பக்தநந்தனார்' என்ற நாடகமும் இடம் பெறும்.

விசேட நிகழ்ச்சியாக தேவார இசைமணி எஸ் ஆர். திருஞானசம்பந்தனின் பண்ணிசை இடம்பெறும். (ஐ 7-15

## அமைப்பு

யாழ். காங்கேசன்துறை வீதியில் உள்ள யாழ். பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கட்டடப் பகுதியில் குழாய்க் கிணறு அமைக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ஐ – 17)


1st in Com.

## G. A. Q. (யாழ்., பேராதனை)

விரிவுரைகள் ஆரம்பமாகிவிட்டன.

★ பல்கலைக்கழகப் பதிவுகள் கொடுக்கப்படும்.
★ A/L இல் 3 பாடங்கள் (கலை / வர்த்தகம் / விஞ்ஞானம்) சித்தியடைந்தவர்களும் பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் விண்ணப்பிக்கலாம்.

விவரங்களுக்கு: S, அருள்நங்கை

புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி, யாழ்.
(65496)


## வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை

கரவெட்டி

பகிரங்க அரங்காடல் கட்டளைச் சட்டம்
பிரிவு 176 பந்தி 3இன் பிரகாரமான

## அறிவித்தல்

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை நிர்வாக எல்லைக்குள் நடத்தப்படும் பகிரங்க அரங்காட்டு நிகழ்வுகள், நிதி உதவிக் காட்சிகள் யாவும் பிரதேசசபையின் முன்னனுமதி பெற்றுச் செயற்படுத்த வேண்டும். இந்நோக்கத்திற்காக விற்பனை செய்யப்படும் ரிக்கற்றுக்கள் யாவும் சபையின் இலச்சினை பொறிக்கப்பட்டதாக இருத்தல் வேண்டும். இந்த விதிமுறையைப் பின்பற்றாதவர்கள் மீது பிரதேச சபை உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதை அறியத்தருகின்றேன்.

செல்லையா சுந்தரமூர்த்தி
தலைவர்
வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை,
கரவெட்டி.

வடமராட்சி தெற்கு மேற்கு
பிரதேச சபை,
கரவெட்டி.

(சி/7446)


கணபதி

## தொலைத்தொடர்பு நிலையம்

உள்நாட்டு, வெளிநாட்டு
தொலைபேசி துரித சேவை.

இரவு - பகல் சகல வசதிகளுடனும்
குறைந்த கட்டணத்துடனும் பெற்றுக் கொள்ளலாம்.

உள்நாடு T. P. No:- 070 – 212436
வெளிநாடு T. P. No:- 0094 – 212436

T. பொன்னம்பலம்,
(மிசன் பாடசாலைக்கு அருகில்)
வல்வெட்டித்துறை.

(65474)



## பஸிபொலி

கல்வி நிலையம்
பிரதான வீதி, காரைநகர்.

A/L 2001 கலை, வர்த்தகம்

கணக்கீடு — திரு. V. உருத்திரசிங்கம்
வணிகக்கல்வி — திரு K. சத்தியதாஸ்
பொருளியல் — திருமதி M. சிவகுமார்
தமிழ் / இந்துநாகரிகம் } திரு. காரை. S. கெங்கா

ஆரம்பம் 07 – 05 – 99 வெள்ளி
மாலை 4-00 (N T)

– நிர்வாகி

(65488)


## வழியனுப்பு வழிபாடு

எமது கல்லூரியின் வழியனுப்பு வழிபாடும்
சான்றிதழ் வழங்கும் வைபவமும்
எதிர்வரும் 09 - 05 - 99 ஞாயிற்றுக்கிழமை
பி. ப. 3.30 மணிக்கு (புதிய நேரம்)
உடுவில் தேவாலயத்தில் நடைபெறும்.

தலைவர்:
அருள்மிகு அறிவர் S. ஜெபநேசன்

சிறப்பு விருந்தினர்
வண. அறிவர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம்

அன்பர்கள் அனைவரும்
அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

உங்கள் வரவை எதிர்பார்க்கும்
கல்லூரிக் குடும்பத்தினர்.

கிறித்துவ இறையியல் கல்லூரி,
சுன்னாகம், இலங்கை.

[சி / 7429)


## மோகன்ஸ்

தொலைபேசி நிலையம்
&
ரைப்பிங் சென்ரர்

பிரதான வீதி, நெல்லியடி, கரவெட்டி.

உள்நாடு: 021 - 3212
வெளிநாடு: 0094 - 21 - 2153 - 3212
0094 - 21 - 2154 - 3212

இரவு பகல் சேவை, தங்குமிட வசதிகள்
இலவசம்.

உள்நாட்டு, வெளிநாட்டு தொலைபேசிச் சேவையைக் குறைந்த கட்டணத்தில்
பெற்றுக் கொள்ளலாம்.

தமிழ், ஆங்கில மொழி பெயர்ப்பு, ரைப்பிங்
செய்து கொடுக்கப்படும்.

[illegible]
(உரிமையாளர்)

(65478)


வீடமைப்பு நகர சீர்திருத்தக் கட்டளைச் சட்டம்
(பிரிவு 268) இன் பிரகாரமான

## அறிவித்தல்

வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபையின் அனுமதியின்றி சபை நிர்வாக எல்லைக்குள் கட்டடங்கள் கட்டுதல், புதுப்பித்தல், வேலைகள் செய்தல், வீதியோர எல்லைச் சுவர்கள் அமைத்தல் என்பன சட்டத்தின்படி தண்டனைக்குரிய குற்றமாகும்.

ஆகவே கட்டடங்கள் கட்டுவதற்கும், பழைய கட்டடங்களைப் புதுப்பிப்பதற்கும், வீதியோர எல்லைச் சுவர்கள் அமைப்பதற்கும் பிரதேச சபையில் இருந்து பெறப்படும் விண்ணப்பப்படிவத்தின் மூலம் விண்ணப்பம் செய்து வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபைத் தலைவரின் அங்கீகாரம் பெறப்படல் வேண்டும் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன். மேலதிக விவரங்களைத் தலைமை அலுவலகத்திலும், நெல்லியடி, உடுப்பிட்டி, கட்டைவேலி, உப- அலுவலகங்களிலும் அறிந்து கொள்ளலாம்.

செல்லையா சுந்தரமூர்த்தி
தவிசாளர்,
வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபை,
கரவெட்டி.

வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபை,
கரவெட்டி. [C / 7447]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் கல்லூரி நூலகம்.

# உதயன்

## ஏமாற்றுவதில் அர்த்தமில்லை

யாழ்ப்பாணக்குடாநாட்டு மக்களுக்குரிய அடிப்படை வசதிகளைச் செய்வதில் அரசாங்கம் தேனொழுகப் பேசுகிறது; ஆனால் செயலோ மிகக் குறைவே. பேச்சுப் பல்லக்கு, தம்பி கால் நடை என்ற நிலையில்தான் குடாநாட்டின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான கருமங்கள் நகர்ந்து கொண்டிருக்கின்றன.

அரசாங்கத்தின் நிர்வாகம் குடாநாட்டில் முழு அளவில் நடைபெறத் தொடங்கிய பின்னர் — 1995 நடுப்பகுதியின் பின்னர் — தொலைபேசி வசதி, மின்சார விநியோகம். போக்குவரத்து வசதி ஆகியன ''புதிதாக''க் கிடைத்துள்ளது உண்மையே,

ஆயினும் அவை மக்களின் தேவைகளை முழு அளவில் நிறைவேற்றத் தக்கனவாக இல்லை என்பதே கசப்பான உண்மை. வேலைத் திட்டங்களை நினைத்த மாத்திரத்தே செய்து முடிக்க இயலாது என்பதனை எவரும் புரிந்து கொள்வர்,

மக்களின் தேவைகளை நிறைவேற்றும் போது அவை உரிய முறையில் திட்டமிடப்படுவதும், போதிய நிதி ஒதுக்கப்படுவதும் மிக அவசியம்.

யாழ்ப்பாணம் போன்ற பகுதிகளில் முழுப் பிரதேசத்துக்கும் அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டியுள்ளன. ஆகவே துரித திட்டங்கள் (Accelerated Programmes) தேவை.

முழுப் பிரதேசத்திற்கும் துரித திட்டங்களைச் செயற்படுத்துவதற்குத் தேவையான நிதியை ஒரே முறையில் கண்டு பிடிப்பது அரசுக்குச் சிரமமாக இருக்கலாம். அதனைப் பொறுத்து திட்டங்களைப் படிப்படியாகச் செயற்படுத்த முனைய வேண்டும்,

அரசியல் பிரசாரத்துக்காக, வெளிநாடுகளுக்குச் சொல்லிக் கொள்வதற்காக ஏதோ எல்லாம் அசுர வேகத்தில், முழு அளவில் நடைபெறுவதாகக் கூறுவதில் அர்த்தமில்லை.

வருடங்கள் மூன்று கடந்து விட்ட போதிலும் முன் சொன்ன மூன்று தேவைகளும் இன்னும் மக்களுக்குப் பூரணமாக, குறைவின்றிக் கிடைக்கவில்லை.

தேவைப்படும் எல்லோருக்கும் தொலைபேசிவசதி செய்யும் தொழில்நுட்ப வளம் இல்லை

மின்சார விநியோகத்தில் உள்ள குறைபாடுகளைச் சொல்லி மாளாது.

போக்குவரத்தில் வீதிகளை அமைத்தலும், திருத்தலும் குறித்தும் மக்களிடம் நிறைய முறைப்பாடுகள் உண்டு.

வீதிகளைத் திருத்துவதற்குப் போதிய நிதி தமக்குத் தரப்படவில்லை என்றும் ஏற்கனவே செய்யப்பட்ட வேலைகளுக்குரிய பணத்தைக் கொடுக்க முடியாமல் திண்டாடுவதாகவும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை வட்டாரங்கள் தெரிவித்திருப்பது இங்கு நோக்கற்பாலது. அரசின் பேச்சும் — பிரசாரமும் — செயலும் எவ்வாறு வேறுபட்டு நிற்கின்றன என்பதற்கு ஒரு நல்ல உதாரணம்.

செய்வதை மட்டுமே சொல்வது என்று அரசு சங்கற்பம் செய்தால் மக்கள் ஏமாற்றம் அடையும் நிலை தோன்றாதல்லவா?

# பிறர் துன்பத்தைத் தன்னிற் காண்பது தர்ம வாழ்வின் இலக்கணமாகும்

**சிவத்தமிழ்ச் செல்வி**
**கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி**

''தர்மம் தலை காக்கும்'' என்பது அனைவரது உள்ளத்திலும் ஒலிக்க வேண்டிய முதுமொழி. உலகில் தோன்றிய ஒவ்வொரு பொருளும் அதனதன் தர்மத்திலே தான் தங்கியுள்ளது. தர்மம் அழிந்தால் அனைத்தும் அழியும். எனவே அழியாத தர்மத்தினால் அனைத்தையும் காப்பாற்ற வேண்டும். அன்பும் கருணையும் தர்மத்திலிருந்து பிறக்கிறது. இறைவனுடைய வெளிப்பாடும் கருணைதான். உலகப் படைப்புகள் அத்தனையும் இறைவனின் குழந்தைகாள. பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை இருப்பதனால் மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் என்று ஞானக்குழந்தை அருளுகின்றது. தர்மமே நல்ல வண்ணம் வாழ்வதற்கு தர்மமே உயிர் நிலையாகும். ஞானதர்மம், தானதர்மம் என்றெல்லாம் தர்மம் விரிவடைகிறது. இத

**ஞானக் கதிர்**

ன்றாலே உலகம் உய்வடைகிறது. ''தருமத்தின் வழிச் செல்கை கடனென்று தன் மைந்தன்மருமந்தன் தேராழி உற ஊர்ந்தான் மனுவேந்தன்'' என்று குறிப்பிடும் மனுச் சோழனுடைய வரலாறு தர்மத்தின் உச்ச நிலையாகும். இதனால் அவனுடைய ஆட்சிக்கு இறைவனுடைய ஆசி முழுமையாகக் கிடைக்கிறது.

உலகிலே பெருங்கோடீஸ்வரராகிய ஒருவர் சிக்காகோ நகரில் சுவாமி விவேகானந்தரைச் சந்தித்தார். அவருக்கு சுவாமிகள் முதலில் கூறிய அருளுரை ''தருமம் செய்'' என்பது. கோடீஸ்வரர் திரும்பி விட்டார். மீண்டும் இரண்டு வாரங் கழித்து வந்து தரிசித்தார். அப்பொழுதும் திரும்பிப் பாராமலேயே ''செயற்படுத்து'' என்று திருவாய் மலர்ந்தார். கோடீஸ்வரர் தெளிவடைந்தார். அங்கிருந்து புறப்பட்டு தர்ம காரியங்கள் பலவற்றுக்கு நிதி கொடுத்து இன்றும் ''புகழ் பெற்ற பொன் மலை'' என்ற பெருமைக்கு ஆளாகி நினைவு கூரப்படுகிறார். அவர் ஒரு கோடீஸ்வரர் என்ற நாமத்தோடு மாத்திரம் வாழ்ந்திருந்தால் அவர் மறைவோடு நாமமும் மறைந்திருக்கும். ஆனால் தர்ம ஸ்தாபனங்களை வளர்த்த காரணத்தால் அவர் மறைந்தாலும் நாமம் நின்று நிலவுகின்றது. ஞானிகளின் வாக்கு காரிய சித்தியைத் தருவது.

பிறர் துன்பங்களைத் தன்னிற் காண்பது விசேட தர்மமாகும். திருநின்ற ஊரில் காளத்தி முதலியார் என்பவர் சிறந்த தர்மவானாக வாழ்ந்தார். இரப்போர்க்கு இல்லையென்னாது வாரி வாரி வழங்கும் கொடையாளி அவர். இதனால் அந்த ஊர் மன்னவன் காஞ்சிப்பல்லவன் பொறாமையடைந்தான். அவருடைய தர்மத்துக்கான சொத்துக்களைப் பறிமுதல் செய்தான். கொடுக்க வழி இல்லையே என்ற கவலையுடன் முதலியார் மனைவியையும் அழைத்துக் கொண்டு சென்று ஒரு சத்திரத்தில் தங்கியிருந்தார். வறுமையால் வாடிய ஒரு புலவர் அந்தச் சத்திரத்திலிருந்து மறுநாள் முதலியாரிடம் செல்வதாக நினைத்து மனதுக்கு ஆறுதல் கூறி ஒரு பாட்டுப் பாடினார். இருவரும் ஒருவரையொருவர் முன்பின் அறியாதவர்கள். புலவர் வறுமையை விளித்துப் பாடுகிறார். முதலியார் காதில் விழுகிறது.

''நீளத் திரிந்துழன்றாய்
நீங்கா நிழல் போலே
நாளைக் கிருப்பையோ
நல்குரவே — காளத்தி
நின்றவூர் சென்றக்கால் நீ
எங்கே நானெங்கே
இன்றைக்குச் சற்றேயிரு''

இப்பாடலைக் கேட்டவுடன் முதலியாருக்குக் கவலையேற்பட்டு புலவர் தன்னைக் காணாது ஏமாறப் போகிறாரே என நினைத்து அன்றிரவே நின்றவூர் சென்றார். புலவர் அங்கு மறுநாள் காலை சென்றடைந்து முதலியாரை வணங்கி நின்ற போது புலவரை வரவேற்ற முதலியார் கொடுப்பதற்கு எதுவுமில்லையே என்ற ஏக்கத்தால் உயிரை விட நினைத்து நாகம் உறையும் புற்றில் கை வைத்தார். சீறி வந்த நாகம் அவர் கையில் நஞ்சைக் கக்காது. நாகரத்தினத்தைக் கக்கியது. கொடுத்துச் சிவந்த கையல்லவா? நாகம் எப்படி நஞ்சைக் கொட்டும்? முதலியார் மகிழ்ந்து நின்றார். புலவரின் வறுமைக்கு நிவாரணமாக நாகரத்தினத்தை வழங்கி உள்ளங் குளிர்ந்தார். கொடுத்துக் கெட்டவர் என்று எவருமிருக்க முடியாதன்றோ

மௌனமும் ஒரு தர்மமாகும். இதனால் மனம், வாக்கு, காயம் மூன்றும் புனிதமடைகின்றது திருவண்ணாமலையில் ரமண மகரிஷி மௌன தவம் அனுஷ்டித்து மக்களைப் புனிதப்படுத்தினார். காந்தியடிகள் நாள்தோறும் சிலமணி நேரம் மௌன தவம் செய்து மனதைத் தூய்மைப்படுத்தினார். முடியுமானால் தினந்தோறும் ஒரு மணி நேரமாவது மௌனத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். உண வருந்தும் போது மௌனம் இன்றியமையாதது என்பது சுவாமி சிவஞானந்தர் போதனை. நாமனுபவிக்கும் அனைத்தையும் ஈஸ்வர அர்ப்பணமாக்குவதற்கு மௌன தவமே வாய்ப்பானது. புலனடக்கத்துக்கு மௌனம் முதற்படி. சிந்தனைத் தெளிவுக்கு மௌனம் முதற்படி மௌன நேரங்களில் தனித்திருக்கப் பழக வேண்டும். இதனால் உள்ளம் வலுவடைந்து உறுதி கிடைக்க ஏதுவாகிறது. பொதுவாகப் பேச்சைக் குறைப்பதும் செயலைப் பெருக்குவதும் மனிதனை உயர்த்தும் ஏணிப்படியாகும்.

கர்ணன் தான் செய்த புண்ணியம் அனைத்தையும் கிருஷ்ணார்ப்பணம் செய்ததும சுவர்க்கம் அடைந்தான். அங்கு அவனுக்கு பசியேற்பட்டது. ஆனால் சுவர்க்கம் செல்பவர்களுக்கு பசியேற்படாது என்ற நூலுரையை தேவ தூதுவர்களிடம் அறிவித்தான். ''தர்மத்தை ஏற்போரின் பக்கத்திலிருந்து கொடுக்காதபடியால் தான் இங்கு பசியேற்பட்டது'' என்று தேவ தூதுவர்கள் கூறினர். என்றாலும் சுட்டு விரலை வாயினுள் வைத்துச் சுவைக்கும் படி கர்ணனுக்குக் கூறினார். அப்படியே செய்த பொழுது பசி நீங்கியது. காரணத்தை வினவியபோது ''துரியோதனன் சபைக்கு கிருஷ்ண பரமாத்மா தூது சென்ற காலை விதுரன் வீட்டைச் சுட்டிக்காட்டி உங்களுக்கு உணவு அங்கேதான். என்று கூறிய மகிமையால் சுட்டு விரலே பசி தீர்க்கும் சக்தியைப் பெற்றமையை உணர்த்தி நின்றனர் தேவ தூதர்கள். எனவே, தர்மம் செய்ய முடியாத போதும் அதற்குரிய இடத்தைச் சுட்டிக்காட்டல் உயர்ந்த தர்மம் என்பதை இதனால் அறிய முடிகிறது.

(நன்றி: வாழும் வழி)

## அதிபர் சேவை தரமுயர்வு நடைமுறை குறித்து விளக்கம்

யாழ்ப்பாணம், மே 7

இலங்கை அதிபர் சேவை தரம் I, தரம் II ஆகியவற்றுக்கு தெரிவு செய்யப்படுபவர்களில் 60சதவீதமானோர் திறந்த போட்டிப் பரீட்சை மூலமே தெரிவு செய்யப்படுவர் என்றும் —

மிகுதி 40சத வீதமானோர் சேவை மூப்பு அடிப்படையில் தெரிவு செய்யப்படுவர் என்றும் —

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க பொதுச்செயலாளர் த. பஞ்சலிங்கம் தெரிவித்தார்.

அவர் மேலும்தெரிவித்ததாவது:—

இலங்கை அதிபர் சேவை தரம் I, II ஆகியவற்றுக்கான திறந்த போட்டிப் பரீட்சைக்கு தற்போது அதிபர் சேவையில் தரம் II மற்றும் தரம் III ஆகியவற்றில் உள்ளவர்களும் விண்ணப்பித்தல் வேண்டும்.

12வருடசேவையுடையபயிற்றப்பட்டவர்களும் 7 வருட சேவையுடைய பட்டதாரிகளும் அதிபர் சேவை தரம் I க்கும் —

10 வருட சேவையுடைய பயிற்றப்பட்டவர்களும் 5 வருட சேவையுடைய பட்டதாரிகளும் அதிபர் சேவை தரம் II க்கும் —

விண்ணப்பிக்க முடியும்.

ஏற்கனவே 94 ஆம் ஆண்டு விண்ணப்பித்தவர்கள் புதிதாக விண்ணப்பிக்கத் தேவையில்லை. முன்பு விண்ணப்பிக்காத மேலே தரப்பட்ட சேவைக் காலத்தை 31.12.96 இல் பூர்த்தி செய்தவர்கள் இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம்.

இலங்கை அதிபர் சேவை III ஆம் தரத்திற்கு 5 வருட சேவையைப் பூர்த்தி செய்த ஆசிரியர்களும் விண்ணப்பிக்கலாம் என்று அவர் தெரிவித்தார். (ஐ-6)

**நாளை**

சித்திரை 25
சனிக்கிழமை
திதி: ஸப்தமி
காலை 6.29 வரை.
நட்சத்திரம்: திருவோணம்
மாலை 5. 48 வரை.
நடேசர் அபிஷேகம்
அக்கினி நாள் ஆரம்பம்
சுபநேரம்: 2.55-4.25
ராகுகாலம்: 8.55-10.25
[பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி]

**உதய வாக்கு**

கீழ்ப்படியக் கற்றுக் கொள்; ஏவும் நாள் [illegible]
— சுவாமி விவேகானந்தர்

## இராசபாதை ஊடாக மீண்டும் போக்குவரத்து

கோப்பாய், மே 7

கடந்த மூன்று வருடங்களுக்கு மேலாக மக்கள் போக்குவரத்துக்கு அனுமதிக்கப்படாதிருந்த கோப்பாய் பொலீஸ் நிலையத்துக்கும் — கோண்டாவில்— இருபாலைச் சந்திக்கும் இடையிலான இராசபாதை வீதி மீண்டும் மக்கள் போக்குவரத்துக்கு திறக்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் வசிக்கும் மக்கள் விடுத்த வேண்டுகோளை அடுத்தே இந்தப் பாதை போக்குவரத்துக்கு அனுமதிக்கப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை — தற்போது துவிச்சக்கரவண்டி மற்றும் மோட்டார்ச் சைக்கிள்களே இப்பாதையூடாக போக்குவரத்துச் செய்ய முடியும் எனவும் —

குறித்த பகுதியில் உள்ள வீதித்தடைகள் அகற்றப்பட்ட பின்னர் ஏனைய வாகனங்களும் போக்குவரத்துக்கு அனுமதிக்கப்படும் எனவும்— தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி வீதிப் பகுதி மக்கள் போக்குவரத்துக்கு மூடப்பட்டிருந்த நீர்வேலி கோப்பாய், புத்தூர், சிறுப்பிட்டி மற்றும் அச்செழு இருபாலைப் பகுதியில் இருந்து திருநெல்வேலிச் சந்திக்கு மரக்கறிகளை எடுத்து வரும் விவசாயிகள் பல்வேறு கஷ்டங்களின் மத்தியில் வேறு பாதைகளை பயன்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டிருந்தது.

(ஐ-7-72)

## புதியகட்டடத் திறப்பு விழா

காரைநகர் விளானை சன சமூக நிலையமும் கிராம அபிவிருத்திச் சங்கமும் இணைந்து நடத்தும் புதிய கட்டடத் திறப்பு விழாவும் கலைநிகழ்வுகளும் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு கா. குலசேகரம் தலைமையில் நடைபெற உள்ளன.

இந்நிகழ்வில் மங்கள விளக்கினை ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே. எக்ஸ் செல்வநாயகம், ஊர்காவற்றுறைப் பிரதேச சபைச் செயலாளர், கு. கணேசலிங்கம் ஆகியோர் ஏற்ற உள்ளனர்.

புதிய கட்டடம் ஊர்காவற்றுறைப் பிரதேச சபைத் தலைவர் ந. மதனராசாவினால் திறந்து வைக்கப்படும்.

யாழ்ப்பாணம் செயலக உதவித் திட்டப் பணிப்பாளர் வே. சாம்பசிவம் உட்படப் பலர் உரையாற்ற உள்ளனர்.

அதனைத் தொடர்ந்து நடனம், பேச்சு, வில்லுப்பாட்டு, பட்டிமன்றம் போன்ற பல கலைநிகழ்ச்சிகள் இடம்பெற உள்ளன. (ஐ-73)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடம் பெயர்ந்தோர் நிவாரணம்

# இனிமேல் உணவு முத்திரை மூலம்

யாழ்ப்பாணம், மே 7

இடம்பெயர்ந்தோருக்கான 74 'ஏ', 'பி' புள்ளிகளுக்குரிய நிவாரணம் உணவு முத்திரைகள் மூலம் வழங்கப்படவுள்ளது. இந்த நிவாரணத்தைப் பெறும் 87 ஆயிரம் குடும்பங்களுக்கும் உணவு முத்திரைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

கடந்த நான்கு மாதங்களாக பெர்மிட் மூலம் இந்த நிவாரணம் வழங்கப்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கது. தொடர்ந்து அடுத்த ஆறுமாதங்களுக்கு உணவு முத்திரைகள் மூலம் இந்த விநியோகம் இடம்பெறும் என யாழ். செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த நிவாரணத்துக்குரிய அரிசி கப்பல் மூலம் கொழும்பிலிருந்து எடுத்து வரப்பட்டுள்ளதால் இம்மாதம் நடுப்பகுதியில் இந்த விநியோகம் ஆரம்பமாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ-5)

## புதிய வகுப்பறை திறப்பு விழா

குருநகர், மே 7

புதிய கல்வி சீர்திருத்தத்துக்கு அமைவாக ஆரம்பக் கல்வி அபிவிருத்திக்கென யாழ். சென்றோக் றோ. க. வித்தியாலயத்தில் அமைக்கப்பட்டுள்ள புதிய வகுப்பறை இன்று வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்படவுள்ளது.

யாழ். சென்றோக் றோ. க. வித்தியாலய அதிபர் த. சத்தியபாலன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் அன்று காலை 10 மணிக்கு குருநகர் புனித் ஆரோக்கியநாதர் ஆலயத்தில் நடைபெற உள்ள திருப்பலியைத் தொடர்ந்து புனித ஆரோக்கியநாதர் ஆலய பங்குத்தந்தை அருட்திரு அகஸ்ரின் அடிகளார் புதிய வகுப்பறையை திறந்து வைப்பார். (இ-51)

# மரண அறிவித்தல்்கள்

## சிவக்கொழுந்து இராமநாதன்

நவாலியைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சிவக்கொழுந்து இராமநாதன் 06—05—1999 அன்று காலமானார். இவர் காலஞ்சென்ற சிவக்கொழுந்து நல்லம்மா தம்பதிகளின் மூத்த புதல்வனும் மகாலட்சுமியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற நாகரட்ணம், அழகப்பெருமான், பரமநாதன், தங்கமணி ஆகியோரின் அன்புச் சகோதரரும் பத்மாபதி (பிரான்ஸ்), இரகுநாதன் (பிரான்ஸ்), இரங்கநாதன் (பிரான்ஸ்), ஜெயமோகன் (ஜேர்மனி), றஞ்சினி (உரும்பிராய்), அருள்ஜோதி (சுவிஸ்), குமுதா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், ஸ்ரீதரன் (பிரான்ஸ்), இந்திரகுமார் (உரும்பிராய்), நவறஞ்சனி (பிரான்ஸ்), ஜெயலட்சுமி (பிரான்ஸ்), ஸ்ரீகமலன் (சுவிஸ்), சுசீலன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும், யனிஷியா (பிரான்ஸ்), சர்மின் (பிரான்ஸ்), தினோத் (யாழ். மத்திய கல்லூரி), ரம்மியா (பிரான்ஸ்), வினிதா (பிரான்ஸ்), விபுதா (பிரான்ஸ்), வினுஷன் (பிரான்ஸ்), கௌதம் (ஜேர்மனி), ஜீவந்தன் (சுவிஸ்), பிரியங்கன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (7—5—99) வெள்ளிக்கிழமை 10-00 மணிக்கு தகனக்கிரியைக்காக இளங்காடு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தகவல்:
மகாலட்சுமி
(மனைவி),
ந. இந்திரகுமார்
(மருமகன்)

முருகன் வீதி,
உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய் (65507)

## கோவிந்தபிள்ளை தெய்வேந்திரன்

(இலங்கை வங்கி உத்தியோகத்தர்- பருத்தித்துறை)

புலோலி தெற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட கோர்விந்தபிள்ளை தெய்வேந்திரன் 05. 05 1999 அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்ற கோவிந்தபிள்ளை சிவபாக்கியம் தம்பதிகளின் அன்பு மகனும், மனோரஞ்சிதத்தின் அன்புக்கணவரும், தர்ஷினி (ஹற்றன் நஷனல் வங்கி- கொழும்பு) தயாளினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஹென்றியின் (ஹற்றன் நஷனல் வங்கி- சிலேவ் ஐலண்ட்) அன்பு மாமனாரும், யோகேஸ்வரி, பரமேஸ்வரி ஆகியோரின் தம்பியுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் (07. 05. 1999 வெள்ளிக்கிழமை காலை 9, 00 மணிக்கு புலோலி இல்லத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
தயாளினி
(மகள்)

புலோலி தெற்கு,
புலோலி. (65499)

## கனகரத்தினம் வீரசிங்கம்

(இளைப்பாறிய ஆசிரியர்)

அச்சுவேலி ஆஸ்பத்திரி வீதியைச் சேர்ந்த இளைப்பாறிய ஆசிரியர் கனகரத்தினம் வீரசிங்கம் 5-5-99 புதன்கிழமை வவுனியாவில் காலமானார்.

அன்னார் செல்லம்மாவின் அன்புக்கணவரும், திருமதி சம்பந்தராணியின் (ஆசிரியர், வவுனியா), தகப்பனாரும், சிறிஸ்கந்தராசாவின் (இலங்கை வங்கி, வவுனியா), மாமனாரும், காலஞ் சென்றவர்களான ஆசிரியர் ஆறுமுகம், திருமதி கதிராசிப்பிள்ளை மற்றும் திருமதி சின்னத்தங்கச்சி (சிங்கப்பூர்), செல்வி இளையதம்பி பாக்கியம், செல்லத்துரை, சங்கரப்பிள்ளை (ஆசிரியர் கனடா), திருமதி விஷ்ணு இரத்தினம் (ஆசிரியர் கனடா) ஆகியோரின் மைத்துனரும், சஞ்ஜீவன், சாரங்கன், சர்மிளா ஆகியோரின் பேரனும், யாழ்ப்பாணம் பெருமாள்கோயில் மகாவித்தியாலயம், கல்வியங்காடு மகாவித்தியாலயம் ஆகிய வற்றின் முன்னாள் ஆசிரியருமாவார்,

அன்னாரது இறுதிக்கிரியைகள் நேற்று 06-05-99 வியாழக்கிழமை வவுனியாவில் நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
சிறிஸ்கந்தராசா
(மருமகன்)

இலங்கை வங்கி,
வவுனியா. [65494]

## உதைபந்தாட்ட இறுதியாட்டம்

யாழ்ப்பாணம், மே 7

டாக்டர் ஜே. பி. சி. பிலிப்ஸ் ஞாபகார்த்தமாக யாழ். உதை பந்தாட்ட லீக் நடத்தும் உதைபந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டமும் பரிசளிப்பும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.45 மணிக்கு யாழ் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக வண. பிதா என். எஸ் ஜெறோ கலந்து கொள்வார்.

இறுதியாட்டத்தில் பாடும் மீன் வி. க. அணியும், சென் நீக்கலஸ் வி. க. அணியும் மோத உள்ளன.

இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு இடம் பெறவுள்ள மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் யாழ். பல்கலைக்கழக அணியும், சென் மேரிஸ் அணியும் மோத உள்ளன. (ஐ)

## கோழிகளுக்கு தூக்க நோய்

கோண்டாவில், மே 7

கோண்டாவில் வடக்கு மற்றும் உரும்பிராய் தெற்குப் பகுதிகளில் கோழிகளுக்கு தூக்க நோய் பரவி வருகிறது.

கடந்த இரு வாரங்களுக்குள் பெரும் எண்ணிக்கையான கோழிகள் இறந்துள்ளன. இதன் விளைவாக இப்பகுதிகளில் முட்டை விலை அதிகரித்துள்ளது. (ஐ-ரி)

## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்

யாழ். கிளைத்தலைமையகம்

# உலக செஞ்சிலுவைத் தினம் - 1999

மேற்படி தினம் 8 - 5 - 99 மு. ப. 10.00 மணி தொடக்கம் இ. செ. ச. யாழ் கிளைத்தலைமையகத்தில் பேராசிரியர் வி. கே. கணேசலிங்கம் அவர்களின் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினர்: பேராசிரியர் கா. குகபாலன்

**கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும்**

30 - 4 - 99 இல் கல்லூரி மாணவர்களுக்கிடையிலான செஞ்சிலுவைச்சங்க பொது அறிவுப்போட்டிப் பரீட்சையில் பங்குபற்றி பரிசு பெறும் கீழ்க்காணும் மாணவர்களுக்கு பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்கப்படும்.

★ **முதலாம் பரிசு: சண்முகநாதன் ஜனகன்**
(ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை)

★ **இரண்டாம் பரிசு: அகல்யா சேகராஜா**
(சுண்டிக்குளி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்)

★ **மூன்றாம் பரிசு: தங்கராஜா பிரபாகரன்**
(விக்ரோறியாக் கல்லூரி, சுழிபுரம்)

★ **ஆறுதல் பரிசுகள்: பாலகிருஷ்ணன் தனுஷன்**
(சென். ஜோன்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம்)

**நித்தியானந்தக் குருக்கள் சுதானந்தசர்மா**
(விக்ரோரியாக் கல்லூரி, சுழிபுரம்)

**சுதர்சினி பாலகிருஷ்ணன்**
(மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை, பருத்தித்துறை)

**சங்கீதா செல்வராசு**
(விக்ரோரியாக்கல்லூரி, சுழிபுரம்)

உலக செஞ்சிலுவைத் தினத்தில் (08 - 05 - 99) செஞ்சிலுவைச்சங்கம் மூலமாக யாழ் போதனா வைத்தியசாலையிலும், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையிலும் இரத்ததானம் செய்வோருக்குமான அன்பளிப்புகளும் வழங்கப்படும்.

(சி/7451)

# வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை கரவெட்டி

# கேள்வி அறிவித்தல்

கீழ்க்குறிப்பிட்ட வேலைகளுக்கான கேள்விகள் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையினால் 17 - 05 - 1999 ஆம் திகதி முற்பகல் 11-00 மணி வரை ஏற்றுக் கொள்ளப்பட்டு முற்பகல் 11-30 மணியளவில் கேள்விச்சபையால் திறக்கப்படும்.

பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களே கேள்விப்பத்திரம் கோருவதற்குத் தகுதியுடையவர்களாவர்.

கேள்விப் பத்திரங்களை வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபைத் தலைமைச் செயலகத்தில் 14 - 05 - 1999 ஆம் திகதி நண்பகல் 12-00 மணிவரை கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள கேள்விப் பத்திரப் பணத்தையும் கேள்வி வைப்புப்பணத்தையும் செலுத்துவதன் பேரில் பெற்றுக் கொள்ளலாம்.

| | வேலை விவரம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப் பணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் |
|---|---|---|---|
| 1. | சரஸ்வதி வித்தியாலய வீதி, | 250/- | 1000/- |
| 2. | முடக்காடு வீதி | 250/- | 1000/- |
| 3. | தச்சந்தோப்பு வீதி | 250/- | 1000/- |
| 4. | காவில் கிராய்வாய்க்கால் வீதி | 150/- | 250/- |
| 5. | கொற்றாவத்தை அமெரிக்கன் மிசன் பாடசாலை வீதி | 250/- | 1000/- |
| 6. | அந்திரான் சந்தை வீதி | 150/- | 250/- |
| 7. | இரும்புமதவடி ஆலங்கட்டை வீதி | 250/- | 1000/- |
| 8. | வதிரி மெதடிஸ்தமிசன் பாடசாலை வீதி, | 150/- | 250/- |
| 9. | கிளான் வேம்படி வீதி | 250/- | 1000/- |
| 10. | மருதடிக்குளம் வீதி | 250/- | 1000/- |
| 11. | மாதாகோயில் வீதி | 100/- | 200/- |
| 12. | எழும்பிட்டி வீதி | 100/- | 200/- |
| 13. | குளங்கரை விதி | 50/- | 150/- |
| 14. | உடுப்பிட்டிச் சந்தை வீதி | 100/- | 200/- |
| 15. | பத்தினி அம்மன் வீதி | 50/- | 150/- |

செல்லையா சுந்தரமூர்த்தி
தலைவர்
வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை,
கரவெட்டி.

(சி/7455)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நியமனம் பெறும் பட்டதாரிகள்; மேலும் நூறு பேரின் விவரங்கள்

யாழ்ப்பாணம், மே 7

யாழ். மாவட்டத்தில் வேலையற்றிருக்கும் பட்டதாரிகளில் 285 பேருக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இவர்களில் 100 பேரின் பெயர் விவரங்கள் நேற்றைய உதயனில் வெளியாகி இருந்தன. மேலும் 100 பேரின் விவரங்கள் வருமாறு:

வை. ஜெயஸ்ரீ (திருநெல்வேலி தெற்கு), பி. பாலகுமாரி (திருநெல்வேலி வடக்கு), பி. மலர்மகள் (நீர்வேலி வடக்கு), என். சிவாஜினி(மாசார்)ஜே.கார்த்திகேசு (மட்டுவில் தெற்கு), என். ராஜேஸ்வரன் (வதிரி) வி. ஜீவகரன் (கரம்பைக் குறிச்சி கிழக்கு)எஸ் ஸ்ரீலதா (எழுதுமட்டுவாள் தெற்கு) ரி. ஸ்ரீதரன் (தெல்லிப்பழை மேற்கு) ரி. சறோஜா (மீசாலை மேற்கு)பி. லிகோரியன் (யாழ்ப்பாணம்) எஸ். அகல்யா (மானிப்பாய்)எம். கௌரி( மட்டுவில் சாவகச்சேரி)வி.சிவகுமார்(மிருசுவில் கே.தபோநிதி(சாவகச்சேரி), ரி. சுமதி (கோப்பாய்), கே. சுமதி (வல்வெட்டி), ரி. சுகந்தினி(கோண்டாவில்மேற்கு). எஸ். கௌசலை (சுதுமலை தெற்கு), கே.சிவராணி(கந்தரோடை), மி.ரஜனி(மாவிட்டபுரம்,) ரி. யாழினி (சுன்னாகம் கிழக்கு,) பி. பத்மஜா (அராலிமத்தி), என். கலைச்செல்வி (யாழ்ப்பாணம்), ஆர். மேகலா (யாழ்ப்பாணம்)

ஆர். விஜெயகுமார் (பருத்தித்துறை), ஆர். ராஜசூரி (மானிப்பாய்), என். எஸ். ஆர். சிவறூபன் (நீலியம்பனை), எம். சிதம்பரப்பிள்ளை (தெஹிவளை), பி. ஸ்ரீகலா (நீராவியடி), ஆர். சிவகரன் (உடுவில் தெற்கு), எஸ். ஜெயந்தி (அல்வாய் கிழக்கு), ஏ. எம். ராஜகுமார்(பருத்தித்துறை) கே. எஸ். அருளானந்தம் (நவாலி தெற்கு), வி. ஜெயராசன் (மயிலிட்டி வடக்கு), கே. சுகந்தினி (கரவெட்டி மத்தி), ரி சேகர்(கொழும்பு) ரி. பங்கையற் செல்வி (அல்வாய் கிழக்கு), ஜி. அமில்தினி ஏழாலை மேற்கு), எஸ். ஜானகி (புலோலி வடக்கு), ரி. மேலோனி (சுண்டுக்குளி), எஸ். அன்டொர்சன் (யாழ்ப்பாணம்), ஏ. ஜெ. எலிசன் (இளவாலை), ஜி. கௌரி (அல்வாய் மேற்கு), வி. சந்திரமதி (கொழும்பு). ரி. குலறஞ்சனி (கந்தர் மடம்), எஸ். மேனகை(கந்தர்மடம்), பி. சுகிர்தா (உரும்பிராய் கிழக்கு), எஸ். சரத்சந்தர் (மாவிட்டபுரம்), எஸ். பாலபுத்திரன் (துன்னாலை இளவாலை)

பி. கலாவதி (அரியாலை மேற்கு), யு. சிவநாதன் (கொழும்பு), கே. தவசோதி (கரவெட்டி மத்தி), கே. ஜெகதீஸ்வரி (மட்டுவில் கிழக்கு), கே. ஜெகதீஸ்வரி (உடுப்பிட்டி), எம். உமாநந்தி (உடுப்பிட்டி), பி. கலாவதனி (கொழும்பு), கே. சுபாஜஞ்சினி (அச்சுவேலி தெற்கு), ஏ. ராஜரட்ணம் (பலாலி கிழக்கு), ரி. தயாநிதி (கரணவாய் வடக்கு), கே. சாரதா தேவி (அச்சுவேலி தெற்கு), கே. சத்தியமூர்த்தி (நாவலப்பிட்டிய), ரி. இளமுருகன் (தெல்லிப்பழை), கே. ஜீசோதரன் (திருகோணமலை), கே. நிகேநிதி (சுன்னாகம் கிழக்கு), என். இருபாகரன் (கெற்பெலி, மிருசுவில்), வி. சொக்கநாதன் (கரணவாய் கிழக்கு), ஏ. அருளீசன் (அச்சுவேலி), வை. வானதி (கொக்குவில்), கே. முரளிதரன் (திருநெல்வேலி), பி. அஞ்சனாதேவி (இளவாலை), எஸ். கூஈஜினி (மானிப்பாய்), எஸ். செல்வகுமார் (சுன்னாகம் கிழக்கு), எஸ் பிரதீபா (வடலியடைப்பு), வி. இளங்குமார் (யாழ்ப்பாணம்).

வி.சக்திவேல் (நுணாவில்), ரி. சிவறூபன் (யாழ்ப்பாணம்), வி. எஸ். சுகனியா (திருநெல்வேலி), எஸ்.கிருபாவதனி (கோப்பாய் மத்தி), கே. சந்திரிகா (திருநெல்வேலி), ரி. துசித்தா கொக்குவில் கிழக்கு), ரி. மதியழகன் (மவுன்ட் லவினியா), கே. மதீஸ்வரி (கொழும்பு), எஸ். தில்லைநாதன் (புலோலி தெற்கு), என்.புரட்சிதாசன் (கரவெட்டி மேற்கு), எம். ஜோய்றோஸ் (யாழ்ப்பாணம்), ஆர். சடாச்சாரம் (தாவடி), பி. பிறேமலதா (யாழ்ப்பாணம்). எஸ். உமயான் (வட்டுக்கோட்டை தெற்கு), கே. வாசுகி (நாரந்தனை வடக்கு). கே. செல்வராணி(சாவகச்சேரி வடக்கு). எம். நிர்மலா (சாவகச்சேரி). ரி.நளினி( அச்சுவேலி தெற்கு), ரி.பற்றீசியா(யாழ்ப்பாணம்), ஏ. சுகவாணி (இணுவில் மேற்கு). எம். ஜெயகௌரி (தெல்லிப்பழை). பி. விஜிதா (உசன்), எஸ் சசிரேகா(கல்வியங்காடு), எஸ்.எஸ்.பிறேமினி (சுண்டுக்குளி). ரி.புஸ்பாவதி மருதங்கேணி தெற்கு).

## அல்வாய்ப் பகுதியில்

# புதைக்கப்பட்டிருந்த திருட்டு பொருள்கள் மீட்பு!

## இரு இளைஞர்கள் கைது

நெல்லியடி, மே 7

வடமராட்சிப் பகுதியில் அல்வாய் முத்துமாரி அம்மன் ஆலயத்திற்கு அருகில் உள்ள, சில வீடுகளில், முற்றத்தில் புதைத்து வைக்கப்பட்டிருந்த பல ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் படையினரால், மீட்கப்பட்டதுடன், இது தொடர்பாக இரு இளைஞர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இப்பகுதியில் உள்ள திக்கம், அல்வாய், வியாபாரிமூலை ஆகிய இடங்களில் கடந்த சில மாத காலமாக, வீடுகள், சங்கக் கடைகள், தனியார் சில்லறைக் கடைகள், தையல் நிலையங்கள் இரவோடு இரவாக திருடர்களினால் உடைக்கப்பட்டு, பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டிருந்தன.

இத் திருட்டுக்கள் குறித்து, பொதுமக்கள் முறையிட்டதையடுத்து, கடந்த ஞாயிறு அதிகாலை, நாவலடி இராணுவ முகாமைச் சேர்ந்த படையினர் அல்வாய் வடக்கைச் சேர்ந்த ஒருவரை சந்தேகத்தின் பேரில் கைது செய்து விசாரணைக்கு உட்படுத்தியதையடுத்து அல்வாய் முத்துமாரி அம்மன் ஆலயத்திற்கு அருகில் கடந்த செவ்வாய்க்கிழமை அதிகாலை திடீர்ச் சோதனைகளை மேற்கொண்டனர்.

இச் சோதனையின்போது, அப்பகுதியிலுள்ள மூன்று வீடுகளின் முற்றங்களிலிருந்தும், 3 தையல் மெசின்கள், சவர்க்கார வகைகள், பவுடர்கள் சிகரெட்பைக்கற்றுக்கள், பால்மா வகை, பிஸ்கட் வகை, எவர்சில்வர் பாத்திரங்கள், உடுபுடைவைகள், தையல் வெட்டுத்துணிகள் உட்பட மேலும் பல திருட்டுப் பொருளகளை படையினர் மீட்டுள்ளனர்.

இத் திருட்டுக்களுடன் தொடர்புடையதாகச் சந்தேகிக்கப்படும் இதே இடத்தைச் சேர்ந்த சுப்பிரமணியம் மதியரசன் (வயது 18), வேலாயுதம் சந்திரன் (வயது 27) ஆகியோர் கைதுசெய்யப்பட்டு மீட்கப்பட்ட திருட்டுப் பொருள்களுடன், பருத்தித்துறை பொலீஸ் நிலையத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளனர்.

கைதான இருவரும் பருத்தித்துறை பதில் நீதிவான் அ. க. நடராசா முன்னிலையில் நேற்று ஆஜர் செய்யப்பட்ட சமயம் இருவரையும் எதிர்வரும் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் 9 பேரைக் கைது செய்யுமாறு நீதிவான் பருத்தித்துறைப் பொலீஸாருக்கு உத்தரவிட்டார்.

(ஐ-109)

## பரீட்சை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், மே 7

யாழ். பல்கலைக் கழகத்தில் நாளை சனிக்கிழமை ஆரம்பமாகவிருந்த தொழிலாளர் கல்விச் சான்றிதழ் பரீட்சைகள் தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பரீட்சைகளுக்கான புதிய திகதிகள் பின்னர் அறிவிக்கப்படும் என தொழிலாளர் கல்வி அலகின் இணைப்பாளர் அறிவித்துள்ளார். (ஐ)

## மெய்வல்லுநர் போட்டி

யாழ்ப்பாணம், மே 7

யாழ். இந்துமகளிர் ஆரம்பப் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை அதிபர் திருமதி த. துரைசிங்கம் தலைமையில் நடைபெறும்.

யாழ். மேலதிக அரசாங்க அதிபர் து. வைத்திலிங்கம் பிரதம விருந்தினராகவும், இந்து மகளிர் கல்லூரி அதிபர் திருமதி ச. ஜெயராஜா கௌரவ விருந்தினராகவும், கந்தர்மடம்வடமேற்கு,கிராம அலுவலர் வ. சந்திரசேகரம் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர். (இ-7)

## ரெலிக்கொம்...

(முதலாம் பக்கத் தொடர்)

துத் தகர்க்கப்பட்டது.

போக்குவரத்துச் சபை காவல் நிலையத்துக்கு முன்பாக இந்த கபின் அமைக்கப் பட்டிருந்த போதும் இனந்தெரியாதோர் ஊடுருவி தாக்குதல் நடத்தி உள்ளனர் என்று கூறப்படுகிறது.

## ஈழப்பிரகடனம்...

(முதலாம் பக்கத் தொடர்)

தேசத்துரோகச் செயலில் ஈடுபட்டவரை எப்படி சுதந்திரமாக நடமாட அனுமதிக்க முடியும்.

அவர் ஏன்மீண்டும் இலங்கை வந்துள்ளார் என்பதில் அரசு கவனஞ் செலுத்த வேண்டும்.

தமிழ் இளைஞர்களை இராணுவத்தில் சேர்த்துக் கொள்ளவுள்ளதாக செய்திகள் வெளிவந்துள்ளன. இதன் மூலம் விடுதலைப் புலிகள் இராணுவத்தில் ஊடுருவுவதற்கு வாய்ப்பு ஏற்படும் என்பதை அரசு உணர வேண்டும் —என்றார். (இ-3-7)

## புளொட்...

[முதலாம் பக்கத் தொடர்]

சைக்கிள் ஓட்டப் போட்டியில கலந்து கொண்ட பாடசாலை மாணவனான மயில்வாகனம் சந்திரமோகன் (13 வயது) என்பவர் உயிரிழந்தார்.

இதில் காயமடைந்தவர்களில் 4 பேர் அனுராதபுரம் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

## சாவகச்சேரி சந்தையில்

# கால் நடை உணவாக பயற்றங்காய் விற்பனை

சாவகச்சேரிச் சந்தைக்கு பயற்றங்காய் பெருமளவு வருவதால் விலை வீழ்ச்சியடைந்துள்ளது. இதனால் கால் நடைத் தீவனமாக அது விற்கப்படுகிறது.

சந்தைக்கு வரும் பயற்றங்காய் மலைபோல் குவிக்கப்பட்டு கிலோ இரண்டு ரூபாவாக விற்கப்படுகிறது. கால் நடை வளர்ப்போர் பெருமளவில் இவற்றினைக் கொள்வனவு செய்வதைக் காண முடிகிறது.

இதே வேளை —

தேங்காயின் விலையும் வீழ்ச்சியடைந்துள்ளது. சோளக்காற்று வீசத்தொடங்கியுள்ளதால் தேங்காய்கள் பெருமளவு சந்தைக்கு வாகனங்களில் கொண்டு வரப்படுகின்றன. கடந்த மாதங்களில் ஐம்பது ரூபாவுக்கு மேல் விற்கப்பட்ட தேங்காய் நேற்று முன்தினம் ஆகக்கூடிய விலையாக 22 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டது. [ஐ-116)

## 2 மாடுகள் மிதிவெடியில் சிக்கின

பாதுகாப்பு அணைக்கு அருகில் புல் மேயச்சென்ற இரு மாடுகள் மிதிவெடியில் அகப்பட்டு முன்னங்கால்களை இழந்தன.

கடந்த வாரம் வடமராட்சி கிழக்கு மருதங்கேணியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

முதலில் ஒரு மாடு மிதிவெடியில் அகப்பட்டதாகவும் வெடிச்சத்தத்தில் ஏனைய மாடுகள் வெருண்டு ஓடிய போது அவற்றில் ஒன்று மற்றொரு மிதிவெடியில் சிக்கியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## இளைஞர்...

(முதலாம் பக்கத் தொடர்)

யாழ். பஸ் நிலையத்துக்குச் சென்ற பின்னர் காணாமல் போய்விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவர் கடந்த வருடம் மே மாதமும் காணாமல் போய் இருந்தார் என்றும்—

ஆறுமாதங்களின் பின்னர் தமிழ் கட்சி ஒன்றின் ஆலுவலகத்தில் இருந்து இவரைத் தாம் வீட்டுக்கு அழைத்துச் சென்றதாகவும்— இளைஞனின் தாயார் தமது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார். (இ-5)

## அகில...

(முதலாம் பக்கத் தொடர்)

காலை 8. 00 மணிக்கு யாழ். நீராவியடியில் உள்ள நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் ஆரம்பமாகிறது.

மாநாடு மூன்று நாள்கள் தொடர்ந்து நடைபெறும்.

சைவபரிபாலன சபையினால் கடந்த வருடம் ஏப்ரல் மாதம் நடத்தப்பட்ட ''சித்தாந்த பண்டிதர்'' பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கான பட்டமளிப்பு விழாவும் இன்றைய வைபவத்தில் இடம் பெறும்.

பட்டமளிப்பு விழா காலை 10 மணிக்கு நடைபெறும்.

பட்டமளிப்பு விழாவில் சித்தாந்த பிரவேச பண்டிதர் பட்டத்தை 10 பேரும், சித்தாந்த பண்டிதர் பட்டத்தை 8 பேரும் பெற உள்ளனர்.

இந்த விழா தொடர்பான நிகழ்ச்சி விபரம் 6 ஆம் பக்கத்தில்

## கனடாவிலிருந்து நல்லினக் கோழிக்குஞ்சு

யாழ்ப்பாணம் மே, 7

கனடாவிலிருந்து தருவிக்கப்பட்ட ஆயிரத்து 300 நல்லினக் கோழிக் குஞ்சுகள் நேற்று யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவரப்பட்டன.

ஐ. நா. அபிவிருத் திட்ட அமைப்பின் ஏற்பாட்டில் கொண்டுவரப்பட்ட இந்தக் கோழிக் குஞ்சுகள் தற்பொழுது அச்சுவேலி கைத்தொழில் பேட்டையிலுள்ள கோழிப்பண்ணைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இந்தக் கோழிக்குஞ்சுகளில் இரண்டு குஞ்சுகள் மட்டுமே இறந்துள்ளன என்றும்—

ஏனையவை எவ்வித பாதிப்புக்களுமின்றி எடுத்துவரப் பட்டுள்ளன — என்றும் தெரிவிக்கப்பட்டது (இ-5)

## சமய செய்திகளில்

யாழ்ப்பாணம் மே 7

வண்ணை அரசடி விநாயகர் ஆலய வருடாந்த அலங்காரத்திருவிழா இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பித்து தொடர்ந்து பதினொரு நாள்கள் நடைபெறும்.

உற்சவ நாள்களில் தினமும் மாலை 5-மணிககு விசேட அபிஷேகமும், தொடர்ந்து வசந்த மண்டபப் பூசையும் விநாயகப் பெருமான் வீதியுலா வருதலும் இடம் பெறும். (இ-7)

## 3 ஆயிரம்...

(முதலாம் பக்கத் தொடர்)

மேஜர் ஜெயக்கொடி செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

படையில் சேர விரும்புவோர் வவுனியா ரம்மியா ஹவுஸுக்கு காலை 9.00மணி முதல் மாலை 4 00மணிவரை நேரில் வரலாம் என்றும் அவர் கூறினார்.

இந்தச் செய்தியாளர் மாநாட்டில் கேணல் திலக் சேனநாயக்கவும் பங்குபற்றினார். [இ-164-3]

## அரசின்...

(முதலாம் பக்கத் தொடர்)

விவாதம் நேற்று நடந்த சமயம் பேசுகையிலேயே இப்படி அவர் கூறினார்.

யுத்தத்தின் கொடூரம் காரணமாக ஆயிரக்கணக்கில் படையினரையும், அதிகளவு விமானங்களையும் நாடு இழந்துள்ளது.

சுமார் 26 ஆயிரம் படையினர் காயமடைந்து ஊனமடைந்த நிலையிலுள்ளனர்.

தற்சமயம் இராணுவத்தில் இணைக்கப்படுபவர்கள் மீண்டும் இராணுவத்தை விட்டுத் தப்பியோடுகின்றனர். இந்த நிலை நீடிக்க அனுமதிக்கக் கூடாது —

இப்படி அவர் மேலும் தெரிவித்தார். (இ-3-7)

## ரெலோ...

(முதலாம் பக்கத் தொடர்]

ரெலோ அமைப்பின் ஆதரவாளரான அவர் நேற்று முன்தினம் இரவு இனந்தெரியாத நபர்களால் கடத்தப்பட்டிருந்தார் என்றும்—

பின்னர் அவரது சடலம் நேற்றுக்காலை மீட்கப்பட்டது என்றும்— தெரிவிக்கப்பட்டது.

இதேபகுதியில் நேற்று முன்தினம் மாலை புளொட் அமைப்பைச் சேர்ந்த பச்சிளைப்பள்ளி பிரதேச சபைத் தலைவர் வீரகத்தி குணரத்தினம் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொலை செய்யப்பட்டிருந்தார் என்பது தெரிந்ததே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ்த்தினப் போட்டி ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், மே 7

எதிர்வரும் 10 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறுவதாக இருந்த நல்லூர் யாழ்ப்பாண கல்விக் கோட்டங்களுக்கான தமிழ்த்தினப் போட்டிகள் பிற்போடப்பட்டுள்ளதாக யாழ். கல்விவலய பணிப்பாளர் கலாநிதி சா. ந. தணிகாசலம்பிள்ளை அறிவித்துள்ளார்.

இந்தப் போட்டிகள் மறுநாள் 11 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும் என்றும் அவர் அறிவித்துள்ளார்.

(ஐ-6)


A/L 2001
இணைந்த கணிதம்
பிரத்தியேக வகுப்பு
ஆரம்பம்: 09 - 05 - 99
2-00 மணி
ஆரம்ப அலகில் இருந்து
ஆசிரியர்:
by: Mr. அம்பி
A/L 2000 பிரிவும்
நடைபெறுகின்றன.
பொருளியற் கல்லூரி
நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(65509)



NEWTON
(NSC)
423, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
SPOKEN ENGLISH
by: BRITTO
ஆரம்பம்: 08 - 05 - 99
Sat., Sun. 9-00, 10-00
(பழைய நேரம்)
G.A.Q., BA - I
வகுப்புக்களும் ஆரம்பம்
10-00A.M. — 5-00P.M.
மெய்யியல் (G.A.Q.)
4-00 — 5-00 (ப.நே.)
(65527)


## அரை இறுதி போட்டிகள்

யாழ்ப்பாணம், மே 7

யாழ். நகர மைய றோட்டரக்ட் கழகம் பாடசாலைகளுக்கிடையில் நடத்தும் பட்டிமன்றச் சுற்றுப்போட்டியின் அரை இறுதிப்போட்டிகள் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் நடைபெறவுள்ளன.

முதலாவது அரை இறுதிப் போட்டியில் யாழ். இந்துக் கல்லூரி, வயாவிளான் மதிய மகா வித்தியாலயம் ஆகியவற்றின் அணிகளும் —

இரண்டாவது அரை இறுதிப் போட்டியில் வேம்படி மகளிர் கல்லூரி, சென். ஜோன்ஸ் கல்லூரி ஆகியவற்றின் அணிகளும் — விவாதத்தில் பங்கு கொள்கின்றன.

மேற்படி சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியும், பரிசளிப்பு விழாவும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

[இ-7]

## நிவாரண அட்டை விநியோகம்

யாழ்ப்பாணம், மே 7

உடுவில் வடக்கு [ஜே/186] கிராம அலுவலர் பிரிவுக்குரிய நிவாரண அட்டைகள் உடுவில் பிரதேச செயலகப் பணிமனையில் வைத்து இன்று காலை 9 மணி முதல் வழங்கப்படவிருக்கின்றது.

குடும்பத்தலைவர்கள் தமது அடையாள அட்டையுடன் நேரில் வந்து நிவாரண அட்டையைப் பெற்றுக் கொள்ளுமாறு அந்தப் பகுதி கிராம சேவையாளர் பொ. புவனேஸ்வரன் கேட்டுள்ளார்.

(இ-7)


பொருளியற் கல்லூரி
நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
A/L 2001
கலை, வர்த்தகம்
பிரிவு II ஆரம்பம் 08 - 05 - 1999
சனிக்கிழமை காலை 8.00 மணி

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | திரு. S. வரதராஜன் |
| வணிகக்கல்வி | — | திரு. வே. முரளி |
| கணக்கீடு | — | திரு. B. முகுந்தன் |
| பொது வினா | — | திரு. அ. குமாரவேல் |
| அளவையியல் | — | திரு. R.P. சர்மா |
| இந்துநாகரிகம் | — | திரு. ஜோதீஸ்வரன் |
| தமிழ் | — | பிரபல ஆசிரியை |
| நாடக - அரங்கியல் | — | திரு. ஜெ. ரஞ்சினி |
| புவியியல் | — | திரு. இக்னேசியஸ் |
| கிறிஸ்தவம் | — | திரு. வசந்தன் |

அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும்.
குறிப்பு: சகல பாடங்களும் ஆரம்பத்தில் இருந்து கற்பிக்கப்படும்.
(65508)



D. M. I.
366, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
A/L 2001
பிரிவு II
ஆரம்பம்: நாளை
08 - 05 - 99 சனி
8-00 மணி.
(பழைய நேரம்)

| | |
|---|---|
| Acc. | D. SAM |
| Com. | பசில் |
| Eco. | இராஜேஸ்வரன் |
| C.G.P. | தவசேகர் |
| Log. | மோகன் |
| Tam. | வழமையான ஆசிரியர் |
| Chr. | மல்லிகா |
| Hin | ஜோதீஸ்வரன் |
| Dra. | சந்திரன் |
| Geo. | இக்னேசியஸ் |

- D. SAM
(சி/7452)



NEW SCIENCE COLLEGE
JAFFNA.
2001 A/L கணிதப் பிரிவு

| | | |
|---|---|---|
| 9-00 | CHE. | Mr. மகேஸ்வரன் |
| 10-00 | PHY. | Mr. சம்பந்தன் |
| 11-00 | MATHS | Mr. பத்மநாதன் |

சனி, ஞாயிறு வகுப்புக்கள்.
(65516)



கலைவாணி
கல்வி நிலையம்
கோப்பாய் வடக்கு, கோப்பாய்.
A/L2001 கலைப் பிரிவு
பிரத்தியேக வகுப்புக்கள்
ஆரம்பம்: 08-05-99 4.00 p. m.

| | | |
|---|---|---|
| இந்துநாகரிகம்: | — | திரு. சுரேன் |
| தமிழ்: | — | திரு. தயாநந்தன் |
| அளவையியல்: | — | திரு. தயாபரன் |
| பொருளியல்: | — | திரு. விக்கி |
| புவியியல்: | — | திரு. ஜெகன் |
| வரலாறு: | — | உங்கள் ஆசிரியர் |

குறிப்பு: O/L Day Class
நடைபெறுகின்றன.
(சி/7461)



JAFFNA
TECHNICAL INSTITUTE
Reg. No. 15251
JAFFNA, SRI LANKA.
தொழிற் பயிற்சிகள்

① RADIO, TV and VIDEO DECK REPAIRING
சகல இன ரேடியோ, ரீவி, வீடியோ டெக் மற்றும் எலெக்ரோனிக் உபகரணங்கள் என்பன திருத்தும் முறை ஆரம்பத்திலிருந்து பயிற்சியளிக்கப்படும்.
(காலம் 9 மாதங்கள்)

② MOTOR REWINDING and ELECTRICAL WIRING
சகல இன மோட்டார், [F] பான், ரான்ஸ்போமர்கள் றிவைண்டிங் செய்யும் முறை மற்றும் வீட்டு மின் இணைப்பு முறை என்பன பயிற்சியளிக்கப்படும்.
(காலம் 6 மாதங்கள்)

③ MOTOR CYCLE MECHANISM
சகல இன மோட்டார் சைக்கிள், நீரிறைக்கும் இயந்திரம் திருத்தும் முறை ஆரம்பத்திலிருந்து பயிற்சியளிக்கப்படும்.
(காலம் 5 மாதங்கள்)

④ AIR CONDITIONING and REFRIGERATION
சகல இன குளிர்சாதனப்பெட்டி மற்றும் ஏயர் கொன்டிசன் திருத்தும் முறை ஆரம்பத்திலிருந்து பயிற்சியளிக்கப்படும்.
(காலம் 6 மாதங்கள்)

⑤ CITY and GUILDS of LONDON EXAM
(I)POWER (II)ELECTRONICS

⑥ SPECIAL ENGLISH CLASSES
1) TOEFL
2) SPOKEN ENGLISH with GRAMMER
3) NCE
4) PET

புதிய பயிற்சிகள் ஆரம்பம்
12 - 05 - 1999 [கிழமை நாள்களில்] 15 - 05 - 1999 [சனி, ஞாயிறு நாள்களில்]
NOTE: தொழிற்பயிற்சிகள் முடித்த மாணவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்படும்.
மேலதிக விபரங்களுக்கு நேரில்.
- DIRECTOR
52/1, STANLEY ROAD, JAFFNA.
(றெயில்வே கடவை அருகில்)
No. 7 PALALY ROAD, JAFFNA.
(65461)



விக்னா கல்வி நிறுவனம்
A/L 2001 கலை, வர்த்தக வகுப்புகள்
ஆரம்பம்: 09-05-99 காலை 8.00 மணி
O/L Day Class பிரிவு 3
ஆரம்பம்: 10-05-99 காலை 8-30 — 2-00 மணி
பிரிவு 2 இற்கான அனுமதி நிறுத்தப்பட்டுள்ளது.
பிரிவு 4 மிக விரைவில்.
(65517)



NEW SCIENCE COLLEGE
JAFFNA
A/L 2001
இணைந்த கணிதம்
பகுதி
நிலையியல்
[STATICS]
ஆரம்பம்: 01 — 05 — 1999
— A. பத்மநாதன்.
[65457]


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 7-05-1999 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org